மல்கியா 4:2

யோவான் 17:17

நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 109* *மார்ச் 2025*

# நியாயமாகுதல்

***BS# 275, Feb 1959 , p. 14***

## நியாயமாகுதல் என்ற வார்த்தையின் அர்த்தம்

1. **நி**யாயமாகுதல் என்ற வார்த்தைக்கு இரு அர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று, ஒரு காரியத்தை நியாயமானது என்று நிரூபிப்பது என்பதாகும் *(proving right)*, மற்றொன்று ஒரு காரியத்தை நியாயமானதாக ஆக்குவதென்பதாகும் *(making right)*. வெப்ஸ்டர் அகராதி *(Webster Dictionary)* "நியாயமாக்குவது" *(justify)* என்ற வார்த்தையை இவ்வாறு வரையறுக்கிறது: (1) ஒரு காரி - யம் நியாயமானதாக அல்லது சட்டத்திற்கும், நியாயத் திற்கும், நீதிக்கும் கடமைக்கும் இணக்கமானதாக இருப் பதை நிரூபிப்பது அல்லது காண்பிப்பது - நியாயமான தென்பதை ஊர்ஜிதப்படுத்துவது, (2) குற்றப் பழியி - லிருந்து விடுவிக்கப்பட்டதாகத் தீர்ப்பளிப்பது நிரபராதி என்று முறையாக அறிவிப்பது. வேதாகமத்திலும் நியாயமாகுதல் மற்றும் நியாயமாக்கப்படுவது என்ற வார்த்தைகள் இந்த இரண்டு அர்த்தங்களிலும் உபயோகிக் கப்படுகின்றன.



## முதலாம் அர்த்தத்தின் வேதாகம பிரயோகம் - ஒரு காரியம் நியாயமானதென்று நிரூபிப்பது

2. முதலாம் வரையறையின் எடுத்துக்காட்டாக, வேதாகமத்தில் நம்முடைய பரம பிதாவும் கர்த்தராகிய யெஷுஆவும் நியாயமாக்கப்பட்டவர்களாகக் (நீதிபரர் களாக) குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனி யுங்கள். யோவான் ஸ்நானன் பாவங்களுக்காக மனந்திரும்பு தலைப் பிரசங்கித்தபோது, அதை விசுவாசித்த ஜனங்கள் தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள் (KJV பார்க்க வும், *justified God-* தேவனை நியாயப்படுத்தினார்கள் – லூக். 7:29). அதாவது அவர்களைப் பாவிகளென்று ஆக்கினை தீர்த்துத் தண்டிப்பதில் தேவன் நீதியாகச் செயல்பட்டிருந்தார் என்று அவர்கள் அங்கீகரித்தார்கள் - தேவனுடைய செயல்கள் நியாயமானவைகளென்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டன.

3. மனிதனாகிய யெஷுஆ கிறிஸ்துவும் நம்மைப் போலவே எல்லா காரியங்களிலும் (உலகம், அவருடைய மாம்சம், பிசாசு ஆகியவற்றினால்) சோதிக்க அல்லது பரீட்சிக்கப்பட்டிருந்தார், இருந்தாலும் "பாவ மில்லாதவராயிருந்தார்" - "அவரிடத்தில் பாவமில்லை". அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக" இருந்தார். யாவே தேவன் அவருடைய நியாயாதிபதியாக இருந்தார். யாவே தேவன் கர்த்தராகிய யெஷுஆவை நியாயமாக்கினார். அதாவது அவர் நீதியுள்ளவராகவும் நியாயமானவராகவும் இருப்பதை நிரூபிக்கப்பட்டதாகத் தேவன் அறிவித்தார். கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்து நியாயமானவராக இருக்கிறார் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அல்லது நாம் வாசிப்பதைப் போல் அவர் "ஆவியிலே நீதியுள்ளவர்

## தூது நிரல்

1. நியாயமாகுதல்................................1

என்று விளங்கப்பட்டார் (justified in the Spirit) … மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்" (1தீமோ 3:16). ஆதாமின் பாவத்தினால் வந்த தண்டனையை நமக்காக அனுபவிப்பதற்காகக் கர்த்தராகிய யெஷுஆ அவருடைய மாசற்ற மனுஷீகத்தை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். ஏனென்றால் ஆதாமின் பாவத்தின் தண்டனை மரணமாக இருந்தது. ஆகையால் அவர் அவருடைய சொந்த பாவங்களுக்காக அல்லாமல் நம்முடைய பாவங்களுக்காக மரித்தார். “அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்” (1பேது. 2:24). “யாவே தேவன் (யெஷுஆவின் ஒப்புதலுடன்) நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்.” “எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை (தம்முடைய மனுஷீகத்தை) ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து யெஷுஆ அவரே". அவர் தேவனுடைய பார்வையில் எவ்வித பாவமுமில்லாதவராயிருந்தார் என்பதற்குரிய மிக சிறந்த நிரூபணங்களில் ஒன்று என்னவென்றால், அவர் தம்முடைய மனுஷீகத்தை மீட்கும் பலியாக ஒப்புக் கொடுத்திருந்தாலும், தேவன் நம்முடைய பாவங்களுக்காக அவருடைய மனுஷீகத்தின் பலியை ஏற்றுக் கொண்ட அதே நேரத்தில், யெஷுஆவை மனுஷீக நிலைக்கு மிக மேலான நிலைக்கு உயிர்த்தெழச் செய்தார் என்பதாகும். அவரொரு பாவியாக இருந்திருந்தால் இது அசாத்தியமாக இருந்திருக்கும். ஏனென்றால் தேவனுடைய நீதி ஒவ்வொரு பாவியையும் மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கிறது.

## இரண்டாம் அர்த்தத்தின் வேதாகம பிரயோகம் - ஒரு காரியத்தை நியாயமானதாக ஆக்குவது

*4.* வேதாகமம் நியாயமாகுதல் என்ற வார்த்தையை முக்கியமாக இந்த கருத்தில் உபயோகிக்கிறது. இந்த கண்ணோட்டத்திலிருந்து நியாயமாகுதல் என்ற வார்த்தையில் அடங்கியுள்ள பிரதான கருத்து இவ்வாறாயிருக்கிறது: (1) நீதி அல்லது நியாயத்தின் ஒரு தரம் இருக்கிறது; (2)ஏதேனுமொரு காரியம் அந்த தரத்திற்கு இணக்கமற்றதாயிருக்கிறது, அதாவது நீதியின் கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை; (3)குறைவுப்பட்ட அந்த நபரை அல்லது காரியத்தைச் சரியான அல்லது நீதியான தரத்திற்கு இணக்கமாகக் கொண்டு வருவது. இதற்குரிய ஒரு எடுத்துக்காட்டு தராசின் இரு தட்டுகளாகும். ஒரு தட்டில் வைக்கப்பட்ட எடைக்கல் நீதியின் கோரிக்கையைக் குறிக்கும்; மற்றொரு தட்டில் மனுஷனுடைய கீழ்ப்படிதலை அடையாளப்படுத்தும் ஏதேனுமொன்று வைக்கப்பட்டு, நீதியின் கோரிக்கையைச் சமநிலைப் படுத்துவதற்குச் சரிசமமான எடையுள்ளதாகக் காணப்பட வேண்டும். இந்த கீழ்ப்படிதல் எல்லோரிலும் குறைவுப் பட்டிருக்கிறது. மேலும் அதை நியாயமாக்குவதற்கு அல்லது நீதியுடன் சமநிலைப்படுத்துவதற்கு, அதனோடு ஏதேனுமொன்றைக் கூட்டுவதின் மூலம் அந்த குறைபாட்டுக்கு சரி ஈடு செய்யப்பட வேண்டும்.

*5.* இந்த எடுத்துக்காட்டை இன்னும் குறிப்பாகப் பிரயோகிக்கும்போது, ஆதியில் ஆதாம் தேவ சாயலில் பூரணராகச் சிருஷ்டிக்கப்பட்டதை நாம் காண்கிறோம் (ஆதி.1:26,27,29). அவர் தேவனுக்கு இசைவிணக்கமாகவும், கீழ்ப்படிந்தவராகவும் இருந்தார். இது அவருடைய நியாயமான, சரியான, நீதியான நிலையாக இருந்தது. அவர் அந்த நிலையில் தொடர்ந்து நீடித்திருந்திருக்க வேண்டும். ஆனால் பாவத்தினால் அவர் தேவனுடைய தண்டனையின் கீழ் வந்தார். இனி தேவனுடைய தரத்தை நிறைவேற்றாதவராக இருப்பதால் உடனடியாகப் புறக்கணிக்கப்பட்டார். அது முதல் அவருடைய சந்ததியாரும் "துர்குணத்தில் உருவாக்கப்பட்டுப் பாவத்தில் பிறந்தார்கள்". ஆகையால் அவர்களுடைய தகப்பன் ஆதாமின் வீழ்ச்சிக்கு பிறகு அவர் இருந்த நிலையைவிட இன்னும் தாழ்வான நிலையில் பிறந்தார்கள் - தேவ நீதியினால் கோரப்பட்ட தரத்திற்கு இன்னும் தூரமாக சென்றார்கள். “ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை.” ஏனென்றால் “எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்” (பிர. 7:20; ரோம. 3:23 - come short of the glory of God – தேவமகிமையின் தரத்திற்குக் குறைவு பட்டவர்களானார்கள்).

*6.* ஆதாமின் சந்ததியைச் சேர்ந்த எந்த ஒருவனும் பூரண தரத்தை நிறைவேற்ற கூடாதவனாயிருக்கிறான். ஆகையால் சுபாவத்தின் படியே அனைவரும் தேவ நீதிக்கு முன்பாகத் தண்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் திரும்பத் தேவனோடு உடன்படிக்கை பந்தத்திற்குள் வந்து, நித்திய ஜீவனில் அவரோடு ஐக்கியங் கொள்ள வேண்டுமானால்,அவர்கள் அனைவரும் தேவனுக்கு முன்பாக நியாயமாக்கப்படுவது அவசியமானதாகும். ஆதாமின் சந்ததியில் எந்த ஒருவனும் அந்த குறைபாட்டை எவ்விதத்திலும் சரி செய்யவோ, தன் சகோதரர் நிமித்தம் மீட்கும் பொருளைக் கொடுக்கவோ கூடாததாயிருக்கிறது (சங். 49:7). ஏனென்றால் மற்றொருவனுக்காக உபயோகிக்கப்படக் கூடிய கூடுதலான புண்ணியமோ நற்பண்போ எந்த ஒருவனிடமும் இல்லை. சொல்லப் போனால் தனக்குப் போதுமான அளவுக்கும் கூட எந்த ஒருவனிடமும் இல்லை.

## உண்மை நிகழ்வான நியாயமாகுதல் (actual justification) - இழந்ததைத் திரும்பக் கொடுக்கப்படும் காலங்களில் நடைபெறும்

*7.* தேவன் தம்முடைய மா உன்னத அன்பினால் (யோவா. 3:16,17) தம்முடைய குமாரரை உலகத்தில் அனுப்பினார். "வார்த்தை மாம்சமாக்கப்பட்டது" (யோவா. 1:14). அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக (எபி. 7:26) இருந்ததால், ஆதாமுக்காகவும், அவர் பாவஞ் செய்தபோது அவருக்குள்ளிருந்த சந்ததிக்காகவும் ஒரு ஈடுகிரயமாக, மீட்கும் கிரயமாகத் தம்மை ஒப்புக் கொடுக்கக் கூடிய மனுஷனாகிய கிறிஸ்து யெஷுஆவாக (1 தீமோ. 2:6) இருக்கும்படிக்கு மாம்சமாக்கப்பட்டிருந்தார். மேலும் அவர் "நம்முடைய (சபையின்) பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக (பாவங்களைக் குறித்துத் திருப்தி செய்கிறவராக - தேவ நீதிக்கு முன்பாக குறைபாடுகளை நிறைவு செய்கிற)" இருப்பது மட்டுமல்ல, "சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் (பாவங்களைக் குறித்துத் திருப்தி செய்கிறவராக இருக்கிறார்)" (1யோவா. 2:2). “நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம் …நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே” (யோவா. 6:51) என்று யெஷுஆ கூறினார்.

*8.* கர்த்தராகிய யெஷுஆ பிதாவின் சித்தத்தை

நிறைவேற்றுவதில் மரண பரியந்தமும் வெளிப்படுத்தின கீழ்ப்படிதலின் நிமித்தம் தேவன் அவரைப் பரலோகத்தில் தமது வலது பாரிசத்தின் நிலைக்கு (எபி. 1:5) எல்லா வற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் (பிலி. 2:8,9). இதற்குக் கூடுதலாக, யெஷுஆ நியாயப்பிரமாணத்தின் கீழ் வெளிப்படுத்தின கீழ்ப்படிதலினால் ஒரு மனுஷனாக ஜீவ உரிமையையும், அதனோடு இணைந்த ஜீவாதார உரிமை எல்லாவற்றையும் சம்பாதித்துக் கொண்டார். ஏனென்றால் "இவைகளைச் செய்கிற மனுஷன் இவை களால் பிழைப்பான்" என்று நியாயப்பிரமாணம் கூறு கிறது (லேவி. 18:5; ரோம.10:5). நம்முடைய கர்த்தரின் பரத்துக்குரிய நிலையில் இந்த மனுஷீக ஜீவ உரிமையும் ஜீவாதார உரிமைகளும் அவருக்குத் தேவையாக இல்லாத தால், அவர் அவைகளை முழு மனுகுலத்திற்காகவும் உபயோகிக்க முடியும். அதாவது "உலக தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லா ருடைய வாக்கினாலும் உரைத்த இழந்த எல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கும் காலங்களில்" மனுகுலத்தார் அனை வரையும் நியாயமாக்குவதற்காக அல்லது சரியானவர் களாக ஆக்குவதற்காகக் கர்த்தர் அவருடைய மனுஷீக உரிமைகளை உபயோகிப்பார். இவ்வசனத்தின்படி இழந் ததைத் திரும்பக் கொடுக்கும் காலங்கள் யெஷுஆவின் இரண்டாம் வருகையைத் தொடர்ந்து வரும் (அப். 3:19-21).

*9.* இழந்ததைத் திரும்பக் கொடுக்கும் இந்த காலங்களில், அதாவது பூமியின் மேல் கிறிஸ்துவின் மில்லினிய யுக நீதியின் ஆட்சியில், ஜாதிகளை இனி மோசம் போக்காத படிக்குச் சாத்தான் முழுமையாகக் கட்டப்பட்டிருக்கும்போது, தேவன் மாம்சமான யாவருக் காகவும் தம்முடைய பரிசுத்த ஆவியை ஊற்றுவார் (யோயே. 2:28). அப்பொழுது "கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய் காணும்" (ஏசா. 40:5). அப்பொழுது ஆபிரகாமின் வித்து வகுப்பார் சத்தியத்தைப் பற்றிய அறிவையும், தகப்பன் ஆதாமில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தேவ சாயலைத் திரும்ப அடைவதற்கான சந்தர்ப்பத்தையும் அளித்து பூமியின் எல்லா ஜாதிகளையும் ஆசீர்வதிப்பார்கள். வீழ்ச்சியினால் பெற்ற அனுபவங்களும், அதிலிருந்து மீட்கப்படும் போது பெற்ற அனுபவங்களும் அதற்கு ஆதரவாக இருக்கும்.

*10.* மனுகுலத்தைப் பூரண நிலைக்குத் திரும்பக் கொண்டு வருவதற்காகச் செய்யப்படும் இந்த இழந் ததைத் திரும்பக் கொடுக்கும் வேலையானது உண்மை நிகழ்வான நியாயமாகுதலின் வேலையாயிருக்கும். இது அவர்களை உண்மை நிகழ்வாக நியாயமானவர்களாக அல்லது பூரணர்களாக ஆக்கும். ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்படும் போது இந்த உண்மை நிகழ்வான நியாயமாகுதல் துவங்கும். மேலும் "ஒவ்வொரு வனும்" (எபி. 2:9) தகப்பன் ஆதாமினால் இழந்த எல்லா வற்றையும் திரும்ப அடைவதற்கான முழுமையான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் வரை அது படிப்படியாக முன்னேறும். அவர்களுக்கு அளிக்கப்படும் கூடுதலான அனுபவங்களும் அவர்களுக்கு உதவும். உண்மைநிகழ்வான நியாயமாகுதலின், அதாவது உண்மை நிகழ்வாகச் சரி செய்யப்படுவதின், அதாவது விருப்பத் துடன் கீழ்ப்படிகிற மனுகுலத்தாரை அபூரணத்திலிருந்து பூரண நிலைக்கு (சரீர ரீதியான, மனரீதியான, ஒழுக்க ரீதி யான மற்றும் மதரீதியான பூரணத்துவம்) உண்மை நிகழ் வாகக் கொண்டு வரும் அந்த காலத்திற்காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம்.

## விசுவாசத்தினால் நியாயமாகுதல் (*faith justification*)- கருதப்பட்ட நிலையில் நியாயமாகுதல் (*reckoned justification*) - இழந்ததைத் திரும்பப் பெறும் காலங்களுக்கு முன் நடைபெறும்

*11.* இது விசுவாசத்தினால் தேவனுக்கு முன் நியாயமானவர்களாக ஆக்கப்படுவதை அர்த்தப்படுத்தும். உண்மை நிகழ்வான நியாயமாகுதல் அளிக்கப்படும் காலங்களுக்கு முன், தேவன் மனுகுலத்திலிருந்து ஒரு விசுவாச வகுப்பாரைத் தேர்வு செய்கிறார் அல்லது தெரிந்து கொள்கிறார். அதாவது "தரிசித்து நடவாமல், விசுவாசத்தினால் நடக்க" விருப்பமுள்ளவர்களை (2 கொரி. 5:6), அவரைக் கண்டு கொள்ள இயலாதபோதும் அவரை விசுவாசிக்கிறவர்களைத் தெரிந்து கொள்கிறார். இவ்வாறாக "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது (அவருடைய விசுவாசம்) அவனுக்கு நீதியாக எண்ணப் பட்டது" (கலா. 3:6). பழைய ஏற்பாட்டு காலங்களில் வாழ்ந்த மற்றவர்களான மீதியான மூப்பரான பாத்திர வான்களுக்கும் (எ.டு எபி. 11-ம் அதிகாரத்தைப் பார்ப் போம்), அவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு நீதியாக எண்ணப்பட்டது. இருந்தாலும் ஆபிரகாமும் மற்ற மூப்பரான பாத்திரவான்களும் முழுமையான, பூரண நியாயமாகுதலின் நிலையை அடைய கூடாததாக இருந்தது. அவர்கள் தேவனுடைய குமாரர்களாக ஆக இயலாததாக இருந்தது (யோவா. 1:12). ஏனென்றால் அப்பொழுது கர்த்தராகிய யெஷுஆ இன்னும் பூமிக்கு வந்து, தம்முடைய மீட்கும் பலியின் புண்ணியத்தை ஏற்பாடு செய்யாதிருந்தார். அந்த புண்ணியம் ஏற்பாடு செய்யப்பட்ட பின்புதான் குமாரர்கள் என்ற நிலையை அடைவது சாத்தியமாயிருந்தது. இருந்தாலும் மூப்பரான பாத்திரவான்களின் விசுவாசத்தினால் அவர்கள் தேவ னுடைய சிநேகிதர்களாக இருக்கும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தார்கள் (யாக். 2:23.

*12.* சுபாவத்தினாலே "மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தாலும்" (எபே. 2:3), சுவிசேஷ யுகத்தில் (1) கிறிஸ்துவின் மூலம் அளிக்கப் படுகிற தேவனுடைய கிருபை மற்றும் இரக்கத்தின் செய்திக்கு செவி சாய்த்து, (2) தங்களுடைய தவறான நிலையை அறிக்கை பண்ணுமளவிற்குப் பரத்திலிருந்து வருகிற ஞானத்தோடு இசைவுக்குள் வந்து, (3) பாவத் தைக் குறித்து மனம் வருந்தி, (4) கர்த்தருடைய செய்தியை விசுவாசித்து, (5) தங்களை அவருக்கு ஒப்புக் கொடுத்து, (6) தங்களால் இயன்றவரைத் தங்களுடைய தவறுகளைச் சரி செய்து கொள்பவர்களுக்கு, உண்மை நிகழ்வாக மனுஷீக பூரணத்துவத்தைத் திரும்பக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர்களுடைய கணக்கில் எழுதப்பட்ட கிறிஸ்துவின் பலி புண்ணியத்தினால் அவர்களுடைய குறைபாடுகள் மூடப்பட்டதாகக் கருத தேவன் ஒப்புக் கொள்கிறார்.

*13.* அவர்கள் உண்மை நிகழ்வாக இன்னும் அபூரணர்களாக இருந்தாலும், அவர்களுடைய விசுவாசத் தினால் அவர்களை நியாயமாக்கி, அவர்களை நியாய மானவர்களாக அல்லது சரியானவர்களாகத் தேவன் கருதுவார். இவ்வாறாக அவர்கள் விசுவாசத்தினால் முழுமையான, பூரண நியாயமாகுதலைப் பெற்றுக் கொள்வார்கள். அவ்வாறு நியாயமாக்கப்பட்டவனின் விசுவாசம் தொடர்ந்து நீடித்து, தேவனுடைய சித்தத்தைச் செய்யும் முயற்சிகளால் அதை நிரூபித்துக் கொண்டிருக்

கும்வரை இந்த கருதப்பட்ட நியாயமாகுதல் அல்லது விசுவாசத்தினால் நியாயமாகுதல் தொடர்ந்து நீடிக்கும், விசுவாசமும் கீழ்ப்படிதலும் இல்லாமல் போனால் நியாய மாகுதலும் கணக்கில் எழுதப்படுவது முடிவுக்கு வரும். "ஆனபடியால், கிறிஸ்து யெஷுஆவுக்குட்பட்டவர்களா யிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" *(ரோம. 8:1).*

*14.* இவ்வாறாகச் சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்த விசுவாச வகுப்பாரைக் கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு முன்பாக நியாயமாக்கும் படிக்கு அவர் களுடைய கணக்கில் எழுதப்பட்ட கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலமும் தேவனோடு ஐக்கியத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். அதன் மூலம் அவர்கள் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்கள் இரட்சிப்பு நிறை வேற பிரயாசப்பட்டு *(பிலிப். 2:12)* பொது மனுகுலத்திற்கு அளிக்கப்படப் போகிறதைவிட உயர்வான ஒரு இரட்சிப் பையும், உயர்வான உயிர்த்தெழுதலையும், மேன்மையான சந்தர்ப்பங்களையும் அடைவதற்காகத் *(எபி. 3:1; வெளி. 20:6; எபே. 1:18, 19; 2:4-8)* தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிச்சயித்துக் கொள்ளக் கூடும் *(2பேது. 1:10).* ஆபிரகாமின் வித்தாகவும் "வாக்குத்தத்தத்தின் படியே சுதந்தரராயும் (கிறிஸ்துவின் உடன் சுதந்தரவாளிகள்)" *(கலா 3:16,29)* அவர்கள் பூமியின் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிப்பார்கள். அதாவது தெரிந்து கொள்ளப்படாதவர்களை, விசுவாச வகுப் பாராக இல்லாதவர்களை ஆசீர்வதிப்பார்கள். மில்லினிய யுகத்தில் இரட்சிப்படைவதற்கான சந்தர்ப்பத்தை அவர் களுக்கு அளித்து, விருப்பத்துடன் கீழ்ப்படிகிறவர்கள் பூமியில் உருவாக்கப்படப் போகிற பரதீசில் பூரண நிலையை அடையும்படி அவர்களுக்கு உதவி செய் வார்கள்.

*15.* சுவிசேஷ யுகத்தில் யெஷுஆவை விசுவாசித் தாலும் பிரதிஷ்டை செய்யாதவர்கள் அதாவது தங்க ளுடைய சொந்த சித்தத்திற்குப் பதிலாகத் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற தங்களை முழுமையாக ஒப்புக் கொடுக்காதவர்கள், பிரதிஷ்டை செய்கிறவர்கள் பெற்றுக் கொள்கிற முழுமையான, பூரண நியாயமாகு தலை அடைய மாட்டார்கள். மாறாக அவர்களுடைய நியாயமாகுதல் மூப்பரான பாத்திரவான்களின் நியாய மாகுதலைப் போல் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகு தலாக இருக்கும். அதாவது அவர்கள் முன்னேறி பிரதிஷ்டை செய்யும் படிக்கு அவர்களுக்கு அளிக்கப் பட்ட நியாயமாகுதலாக இருக்கும். ஆனால் மூப்பரான பாத்திரவான்கள் பிரதிஷ்டை செய்தது போல், அந்த நோக்கத்திற்காக அவர்கள் நியாயமாகுதலை உபயோகிக் கவில்லையென்றால், இறுதியாக அந்த நியாயமாகுதலை சுவிசேஷ யுக நோக்கங்களைப் பொருத்தவரை இழப் பார்கள் - தேவனுடைய கிருபையை விருதாவாய் பெற் றிருப்பார்கள் *(2கொரி. 6:1).*

## பரீட்சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலின் வரையறை—*PTQB p. 729*

*16.* பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் என்பது தேவனுடைய செயலாக இருக்கிறது. ஒருவனுடைய கணக்கில் கிறிஸ்துவின் புண்ணியம் எழுதப்படுவதற்கு முன் அதாவது தேவனிடத்தில் மனந்திரும்பி யெஷுஆவை விசுவாசிக்கிற, ஆனால் பிரதிஷ்டை செய்யாத ஒரு நபரின் கணக்கில் கிறிஸ்துவின் புண்ணியம் எழுதப்படுவதற்கு முன்பே, அவ்வித ஒரு நபர் தன்னைப் பிரதிஷ்டை செய்யும்படி தேவன் அவனை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக, *(1)* அவனுடைய கணக்கில் கிறிஸ்து வின் புண்ணியம் எழுதப்பட்டதைப் போலவும், *(2)* அவனுக்கெதிராயிருக்கிற ஆதாமினால் வந்த தண்டனை ரத்து செய்யப்பட்டதைப் போலவும் அவனைத் தற்காலி கமாக நடத்துவார். ஆனால் உண்மையில் இந்த இரு காரியங்கள் அவனுக்குச் செய்யப்படவில்லை.

*17.* உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் என்பதும் தேவனுடைய செயலாக இருக்கிறது. அதன் மூலம் ஒருவனுடைய கணக்கில் கிறிஸ்துவின் புண்ணியம் எழுதப்பட்ட பிறகு, அதாவது தேவனிடத்தில் மனந் திரும் புதலையும் யெஷுஆவில் விசுவாசத்தையும் அப்பியாசிப் பதற்குக் கூடுதலாக, தன்னைப் பிரதிஷ்டை செய்த ஒருவனுடைய கணக்கில் கிறிஸ்துவின் புண்ணியம் எழுதப்பட்ட பிறகு, அவனுக்கு எதிராக இருக்கிற ஆதாமினால் வந்த தண்டனையைத் தேவன் உண்மை நிகழ்வாகவும் நித்தியத்திற்கும் ரத்து செய்வார். மேலும் ஆதாமினால் வந்த அவனுடைய பாவங்களை உண்மை நிகழ்வாகவும் நித்தியத்திற்கும் மன்னிப்பார்.

## பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் *E Vol 8, p.531-533*

*18.* பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் என்பது வேதாகமத்தில் போதிக்கப்பட்டிருக்கிறது*(ரோம. 4:1-12).* மூப்பரான பாத்திரவான்களும் *(எபி. 11:7; ரோம. 4:18-22),* வாலிபரான பாத்திரவான்களும், பிரதிஷ்டை செய்தவர் களின் முதிர்ச்சியடையாத பிள்ளைகளும் *(1கொரி. 7:14)* சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்யாத விசுவாசிகளும் *(ரோம. 10:4; 4:5; அப்.13:38, 39)* பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். பரீட்-சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட நிலையில், கிறிஸ்து வின் பலி புண்ணியம் உண்மை நிகழ்வாக அவர்களுடைய கணக்கில் எழுதப்படுவதில்லை. இருந்தாலும் அது அவர்களுடைய கணக்கில் எழுதப்பட்டதைப் போல் தேவன் அவர்களைத் தற்காலிகமாக நடத்துவார்.

*19.* நிச்சயமாகக், கிறிஸ்துவின் புண்ணியம் கல்வாரியில் ஒப்படைக்கப்படுவதற்கு முன் உண்மை நிகழ்வாகக் கணக்கில் எழுதப்பட்டிருக்க முடியாது. ஆகையால் மூப்பரான பாத்திரவான்களுக்கு அந்த புண்ணியம் கணக்கில் எழுதப்பட்டிருக்க முடியாது, அவ் வாறு கருதப்பட மட்டுமே கூடும். வாலிபரான பாத்திர வான்களின் காரியமும் அவ்வாறே இருக்கிறது. பிரதி ஷ்டை செய்தவர்களின் முதுர்ச்சியடயாத பிள்ளைகளின் காரியமும் அவ்வாறே இருக்க வேண்டுமென்பது வெளிப் படையாயிருக்கிறது. பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் என்ற கோட்பாடு ஆபேல், ஏனோக்கு, நோவா ஆகியவர் களின் காலத்தில் தொடங்கி *(எபி. 11:4-7),* இழந்ததைத் திரும்பக் கொடுத்தல் துவங்கும்வரை கிரியை செய்யும்.


## பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலின் வேதாகம நிரூபணம்—*PT 1936, P.128*

*20.* ரோம. *4:1-12* வரையுள்ள வசனங்களில் பரிசுத்த பவுல் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலைக் குறித்துக் கொடுக்கிற சில கருத்துகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்: அதற்கு முன்வரும் வசனங்களில் அவர் விசுவாசத்தினால் மட்டுமே உருவாகும் நியாயமாகுதலை நிரூபித்த பிறகு, முற்பிதாக்களின் யுகத்திலும் யூத யுகத்

திலும் செயல்பட்ட விசுவாசத்தினால் நியாயமாகுதலுக் கொத்த ஒரு நியாயமாகுதல் சுவிசேஷ யுகத்திலும் கிரியை செய்கிறதென்று அவர் ரோம. *4:1-12* வசனங்களில் நிரூபிக்க முற்படுகிறார். பின்வரும் கருத்துகளைக் குறிப் பிடுவதின் மூலம் அவர் அதை நிரூபிக்கிறார்: *(1)* ஆபிரகாமின் அனுபவத்தையும் ஆபிரகாமை குறிப்பிடு கிற ஒரு வேத வசனத்தையும் (ஆதி. *15:6*) எடுத்துரைத்து (ரோம. *4:1-3*), அதைச் சுவிசேஷ யுக நியாயமாகுதலின் ஒரு உதாரணமாகவும் நிரூபணமாகவும் குறிப்பிடுகிறார் (ரோம. *4:4,5*); *(2)* தாவீதின் அனுபவத்தையும் அவர் கொடுத்த அறிக்கையையும் எடுத்துரைத்து (ரோம. *4: 6-8*; சங். *32 :1-5* வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்), அதைச் சுவிசேஷ யுக நியாயமாகுதலுக்கு ஒரு உதாரண மாகவும் நிரூபணமாகவும் குறிப்பிடுகிறார். ஆகையால் இது பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலைக் குறிக்க வேண்டும். ஏனென்றால் ஆபிரகாமும் தாவீதும் அவ்வித மான நியாயமாகுதலை மட்டுமே பெற்றுக் கொண்டிருந் தார்கள்.

*21.* அதற்குப் பிறகு, சுவிசேஷ யுகத்தில் இவ்வித மான பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் எல்லா விசுவாசிகளுக்கும் பொருந்தும் என்று நிரூபிக்கக் முற் படுகிறார். ரோம. *4:11,12* வசனங்களை விசேஷமாக கவனிப்போம்: "<u>மேலும் விருத்தசேதனமில்லாத காலத் தில் அவன்</u> (ஆபிரகாம்) <u>விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு</u> (இது பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை அர்த்தப்படுத்துகிறது. ஏனென்றால் எந்த பலி புண் - ணியத்தைக் கணக்கில் எழுதுவதின் மூலம் நியாய மாக்குதலுக்கு உயிரூட்டப்படுகிறதோ, அந்த புண்ணியம் அப்பொழுது இன்னும் உருவாக்கப்படாதிருந்தது) <u>முத் திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற் றுக் கொண்டான்</u> (அதின் நோக்கமென்னவென்றால்) *(1)* <u>விருத்தசேதனமில்லாதவர்களாய்</u> (புறஜாதியார்கள்) <u>விசுவாசிக்கிற</u> (ஆகையால் இங்கே பிரதிஷ்டை செய்த வர்கள் மட்டுமல்ல, பிரதிஷ்டை செய்யாத விசுவாசிகளும் அர்த்தப்படுத்தப்படுகிறார்கள்) <u>யாவருக்கும்</u> (பிரதிஷ்டை செய்தவர்களுக்கும் பிரதிஷ்டை செய்யாதவர்களுக்கும்) <u>நீதி எண்ணப்படும் பொருட்டாக</u> (இது பரீட்சார்த்த ரீதி யான அல்லது உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலாக இருக்கக் கூடும் - அவர்களுடைய கணக்கில் பலி புண்ணியம் எழுதப்படவில்லையென்றால், அது பரீட் சார்த்த ரீதியான நியாயமாகுதலாக இருக்கும், பலி புண்ணியம் கணக்கில் எழுதப்பட்டால், அது உயிரூட் டப்பட்ட நியாயமாகுதலாக இருக்கும்) <u>அவர்களுக்கு அவன் தகப்பனாக இருக்கும்படிக்கும்</u>; *(2)* <u>விருத்த சேதனத்தைப் பெற்றவர்களாய்</u> (கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத யூதர்கள்) <u>மாத்திரமல்ல, நம்முடைய தகப் பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிற வர்களாயுமிருக்கிறவர்களுக்கு</u> (பூமிக்குரிய கானானுக்குப் பிரயாணம் செய்வதற்கு ஆபிரகாம் எல்லாவற்றையும் விட்டு வந்ததைப் போல், பரத்துக்குரிய கானானுக்குப் பிரயாணம் செய்வதற்கு எல்லாவற்றையும் விட்டு வந்து, கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கிற யூதர்கள்) <u>தகப் பனாயிருக்கும் படிக்கும் அந்த அடையாளத்தைப் பெற்றான்</u>". நிச்சயமாக இந்த பன்னிரண்டு வசனங்களும் அந்த அதிகாரத்தின் மீதியுள்ள பகுதியும், விசேஷமாக ரோம. *4:21-24* வசனங்களும், பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் சுவிசேஷ யுகத்தில் கிரியை செய்ததை நிரூபிக்கின்றன.

*22.* மற்ற வேத வசனங்களுடன், பின்வரும் வேத



வசனங்களும் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை நிரூபிக்கின்றன: *1* கொரி. *7: 14*; ரோம. *12: 1; 8: 29, 30; 1* கொரி. *1: 31*; லேவி. *9: 9, 12, 18*.

*23.* *(PTQB p.731)* கர்த்தராகிய யெஷுஆவின் பலி புண்ணியம் பிரதிஷ்டை செய்தவர்களின் முதிர்ச்சி யடையாத பிள்ளைகளின் கணக்கில் எழுதப்பட வில்லை யென்றாலும், அவர்கள் நியாயமாக்கப்பட்டவர் களாக இருக்கிறார்கள். ஆகையால் அவர்களுடைய நியாயமாகு தல் பரீட்சார்த்த ரீதியான ஒன்றாக இருக்க வேண்டும் (*1*கொரி. *7:14*). பரிசுத்த பவுல் ரோம. *12:1*-ல், பிரதிஷ்டை செய்யாத விசுவாசிகளைச் சகோதரர்களென்று அழைத்து, அவர்கள் ஏற்கனவே தேவனுடைய இரக்கங்களை அனுபவித்தவர்களாக குறிப்பிடுகிறார். இங்கே தேவ னுடைய இரக்கங்கள் என்பது பாவங்கள் பரீட்சார்த்த ரீதியாக மன்னிக்கப்படுவதையும், விசுவாசம் நீதியாகக் கணக்கில் எழுதப்படுவதையும் அர்த்தப்படுத்துகிறது. இதுவும் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் சுவிசேஷ யுகத்தில் கிரியை செய்தது என்பதற்கு மற்றொரு வேதாகம நிரூபணமாக இருக்கிறது.

*24.* *(PTQB p.731)* ரோம. *8:29,30* வசனங்களும் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலைத் தெளிவாக நிரூபிக்கின்றன. *P.Vol 6* பக்கம் *182*-ல் பாஸ்டர் ரஸல் காண்பிப்பதைப் போல், இவ்வசனம் சபை வகுப்பாரின் அனுபவங்களை, அவைகள் நிகழும் கால வரிசைக்கு எதிரிடையான வரிசையில் *(reverse order)* குறிப்பிடுகிறது. முதலாவதாக அவர்களுடைய விடுதலையையும், இரண் டாவதாக அவர்கள் பரம அழைப்புக்கு அழைக்கப் படுவதை அல்லது பரிசுத்தமாகுதலையும், மூன்றாவதாக அவர்களுடைய நியாயமாகுதலையும், நான்காவதாகத் தேவனை அறிகிற அறிவினால் கனப்படுத்தப்படுவதை யும் (மகிமைப்படுத்தப்படுவது) குறிப்பிடுகிறார். ஆனால் *1*கொரி. *1:31*-ம் வசனத்தில் அவர் அவர்களுடைய அனு பவங்களை, அவைகள் நிகழும் கால வரிசையில் குறிப்பிடுகிறார். அதாவது அவர்கள் கிறிஸ்துவினிட மிருந்து முதலாவதாக ஞானத்தையும், இரண்டாவதாக நியாயமாகுதலையும், மூன்றாவதாக பரிசுத்தமாகுதலை யும், நான்காவதாக விடுதலையையும் பெற்றுக் கொள் வதாகக் குறிப்பிடுகிறார். ஆகையால் ரோம *8:30*-ம் வசனத் தில் குறிப்பிடப்பட்ட நியாயமாகுதலானது ஒருவன் பரம அழைப்புக்கு அழைக்கப்படுவதற்கு முன் அனுபவிக்கிற ஒன்றாகும். பரம அழைப்புக்கு அழைக்கப்படுவதென்பது, ஒருவன் பிரதிஷ்டைக்கு அழைக்கப்படும்போது நிகழும்.

இந்த பிரதிஷ்டை பரிசுத்தமாகுதலின் முதல் பகுதியாகும். ஆகையால் ரோம. 8:30-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்ட நியாயமாகுதல் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலாகும்.

## மூப்பரான பாத்திரவான்களின் நியாயமாகுதல்

*25.* மூப்பரான பாத்திரவான்களின் நியாயமாகுதலைப் பற்றிய உண்மைகள் இவ்வாறாயிருக்கின்றன: *(1)* அவர்களுடைய நியாயமாகுதலில் தேவ நீதி திருப்தி செய்யப்படாதிருந்தது; *(2)* அவர்கள் ஆதாமின் தண்டனையின்கீழ் வாழ்ந்து மரித்தார்கள்; *(3)* அவர்கள் தேவனுடைய ஐக்கியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமே நியாயமாக்கப்பட்டிருந்தார்கள்; *(4)*அவர்களுடைய பரீட்சை விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பரீட்சையாக மட்டுமே இருந்தது. இது சிம்சோனின் விஷயத்தில் விசேஷமாக நிரூபிக்கப்படுகிறது. அவர்களுடைய பரீட்சை அன்பின் பரீட்சையாக இருக்கவில்லை. பரீட்சிக்கப்பட்ட அன்புடையவர்களாக இல்லாமல் எந்த ஒருவனும் ஒருபோதும் நித்திய ஜீவனை அடைய முடியாது; *(5)* உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலைப் பெற்றுக் கொண்டவர்கள் சுவிசேஷ யுகத்தில் ஜீவனுக்கான பரீட்சையை பெற்றுக் கொண்டார்கள், ஆனால் மூப்பரான பாத்திரவான்களின் ஜீவனுக்கான பரீட்சை இந்த வாழ்க்கையில் அல்லாமல், மில்லினிய யுகத்தில் நடைபெறும் (எபி. 11:40).

*26.* இவ்வாறாக மூப்பரான பாத்திரவான்களின் நியாயமாகுதல் ஜீவனுக்கான நியாயமாகுதல் அல்லவென்று நாம் காண்கிறோம். ஜீவனுக்கான நியாயமாகுதலை அடைவதற்குக் கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் மூலம் தேவநீதி திருப்தி செய்யப்படுவது அவசியமானதாகும் (ரோம. 3: 21-26; 5: 18, 19). மூப்பரான பாத்திரவான்கள் இதுவரை ஆதாமின் தண்டனையின் கீழ் இருக்கிறார்கள். தேவன் அவர்களுக்குக் கொடுத்த உடன்படிக்கையின் தயவுகளெல்லாம், ஆதாமின் தண்டனையை நீக்குவதின் மூலம் அளிக்கப்படாமல், அவர்களிடமிருந்து ஆதாமினால் வந்த மரணத்தைக் கட்டாயமாகக் கோருகிற தேவ நீதிக்கு இணக்கமாகக் கொடுக்கப்பட்டன. ஆகையால் மூப்பரான பாத்திரவான்களாக அவர்கள் ஜீவனுக்கான பரீட்சைக்கு உட்படுத்தப்படாதிருந்தார்கள். அவர்களுடைய பரீட்சை விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் பரீட்சையாக இருந்தது. மேலும் ஆபிரகாமின் காலம் முதல் அந்த பரீட்சை ஒரு கிருபையின் உடன்படிக்கை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டது (ரோம. 4: 13-16; கலா. 3: 18). இந்த கிருபையின் உடன்படிக்கையானது, அவர்கள் மேலுள்ள ஆதாமினால் வந்த தண்டனையைக் கருத்தில் கொள்ளாமல் விட்டுவிடவில்லை, அதை நீக்கவும் இல்லை. மாறாக இந்த உடன்படிக்கை ஆதாமின் தண்டனையின் நீதியை அங்கீகரித்தது. அந்த தண்டனை நிறைவேற்றப்படுவதில் இந்த உடன்படிக்கை தலையிடவில்லை. மாறாக அந்த தண்டனை செயல்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கும்போதே, நிபந்தனையற்ற ஒரு வாக்குத்தத்தமாக இந்த உடன்படிக்கை அவர்களிடம் செயல்பட்டது. ஏதேனுமொரு காலத்தில் தேவ நீதி திருப்தி செய்யப்பட்டு, அவர்கள் மேலுள்ள ஆதாமின் தண்டனை ரத்து செய்யப்படுமென்ற உண்மையை முன்பே கருத்தில் கொண்டு, அவர்களைப் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கினதினால் (ரோம. 4:13-16) இந்த உடன்படிக்கை அவர்களிடம் செயல்படக் கூடியதாக இருந்தது.



*27.* இவ்வாறாக விடுவிக்கப்படுவதற்குத் தகுதியுள்ள ஒரு குற்றவாளிக்குச் சட்டம் வருங்காலத்தில் விடுதலையை அளிக்கும் என்பதை முன்பே கருத்தில் கொண்டு கனிவான ஒரு சிறைகாவளர் அந்த குற்றவாளியிடம் செயல்படுவதைப் போல் தேவன் மூப்பரான பாத்திரவான்களிடம் செயல்பட்டார். இதை அவர் தேவ நீதிக்கும் மீட்கும் பலி புண்ணியத்திற்கும் இணக்கமாகச் செய்தார். தேவ நீதியின் தண்டனையை அனுபவிக்க அவர்களை விட்டுவிட்டார். அதே நேரத்தில், வருங்காலத்தில் தேவ நீதிக்கு இணக்கமாக அவர்கள் பெற்றுக் கொள்ள போகிற விடுதலைக்கு ஆயத்தமாக, தேவனிடத்தில் விசுவாசத்தையும் உண்மைத்துவத்தையும் நிரூபிப்பதற்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்குக் கொடுத்தார்.

*28.* இவ்வாறாக அவர்களுக்காகத் தேவன் பின் வரும் மில்லினிய வேலைகளை ஏற்பாடு செய்தார்: *(1)* அவர்கள் மேலுள்ள ஆதாமின் தண்டனையை ரத்து செய்வதற்காக, புதுஉடன்படிக்கையின் முத்திரையாக இருக்கிற மீட்கும் பலி புண்ணியத்தை அவர்களுக்காக உபயோகிப்பது, *(2)*அவர்களை மரித்தோரிலிருந்து எழுப்புவது, *(3)*அவர்களுடைய வெகுமதியாக மனுஷீக பூரணத்துவத்தையும், பிரபுக்களாக இருக்கும் அதிகாரத்தையும் அவர்களுக்கு அளிப்பது (எபி. 11: 39, 35; சங். 45: 16) - அவர்கள் எழுப்பப்படும்போது அவர்களுக்கு அளிக்கப்படும் வெகுமதி நித்திய ஜீவன் அல்ல, ஏனென்றால் நித்திய ஜீவனைப் பெறுவதற்காக அவர்கள் புது உடன்படிக்கையின் கீழ் பரீட்சிக்கப்பட வேண்டும் (எபி. 11:40).

*29.* அவர்களுடைய பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல், அதாவது தேவனுடைய ஐக்கியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நியாயமாகுதல் அவர்களுக்கு அவர்களுடைய விசுவாசத்தினால் அளிக்கப்பட்டது (யாக். 2:23). இந்த விசுவாசமானது, கடுமையான சோதனையின்கீழ் விசுவாச உண்மைத்துவத்துடன் காத்துக் கொள்ளப்பட்ட அவர்களுடைய பிரதிஷ்டையின் மூலம் உண்மையான விசுவாசமாக ஏற்ற காலத்தில் நிரூபிக்கப்பட வேண்டியதாயிருந்தது (யாக். 2:21,22). இந்த பரீட்

*சார்த்த ரீதியான நியாயமாகுதலின் நோக்கம் என்னவாக இருந்ததென்றால், வருங்காலத்தில் ஒரு வெகுமதியை அடைவதற்கான நம்பிக்கையை அளிக்கும் வாக்குத்தத் தங்களைத் தேவன் அவர்களுக்கு அளிக்கக் கூடு மென்பதாகும் (எபி.11:10,13-16). அதே நேரத்தில் பரீட்சார்த்த ரீதியாக நியாயமாக்கப்பட்டிருந்தாலும், அவர் கள் இந்த வாக்குத்தத்தங்களில் நம்பிக்கையை அப்பியா சிக்கும் காலத்தில் மரண தண்டனையின் கீழேயே இருந் தார்கள் (அதாவது பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் என்பது, அவர்களை மரண தண்டனையிலிருந்து விடு விக்கவில்லை). இவ்விதமான பரீட்சார்த்த ரீதியான நியாய மாகுதல் இல்லாமல், தேவன் அவர்களுடன் உடன் படிக்கையின் மூலம் செயல்பட்டிருக்க முடியாது. அந்த நியாயமாகுதலைப் பெற்ற பிறகு தேவன் அவ்வாறு அவர்களுடன் செயல்படக் கூடும். ஏனென்றால் தேவ னிடம் கிட்டி சேருகிற அனைவரிடமும், தேவன் மரண தண்டனைக்கு இணக்கமாகவும், அவருடைய நீதிக்கு இணக்கமாகவும் எப்போதுமே கிட்டி சேருவார். இவ்வித அற்புதமான கிருபைக்காக அவருடைய பரிசுத்த நாமத்தைப் போற்றி துதிப்போமாக!*

## வாலிபரான பாத்திரவான்களின் நியாயமாகுதல்

*30. வாலிபரான பாத்திரவான்களுக்குத் தேவ னோடிருந்த பந்தமானது, முக்கியமான எல்லா அம்சங் களிலும், மூப்பரான பாத்திரவான்களுக்குத் தேவ னோடிருந்த பந்தத்திற்கு மிகவும் ஒத்ததாக இருந்தது. அந்த அம்சங்களாவன: (1) மனந்திரும்புதல், (2) விசு வாசம், (3) நியாயமாகுதல், (4) பிரதிஷ்டை, (5) ஜீவனுக் காகச் சோதிக்கப்படவில்லையென்றாலும், விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் கடினமான பரீட்சைகளில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருப்பது, (6) நீதிக்குப் பிரதிகூலமான மற்றும் பாவத்திற்கு அனுகூல மான சூழ்நிலைகளில் வாழ்வது, (7) தேவ நீதி திருப்தி செய்யப்படுவது, (8) ஆதாமினால் வந்த தண்டனை, (9) ஆணையினால் கட்டப்பட்ட உடன்படிக்கையின் பூமிக் குரிய அம்சங்கள், (10) தேவனுடைய கிருபையான அன்பு, (11) கிறிஸ்துவின் பலி புண்ணியம், (12) புது உடன் படிக்கை, (13) ஜீவனுக்கான பரீட்சை, (14) பரம அழைப் புக்குள் பிரவேசிக்கும் கதவு திறந்திராததால் அதற்குள் பிரவேசிக்க சாத்தியமற்ற நிலை, இது அவர்களுடைய தவறல்ல.*

*31. ஒரு வகுப்பார் (மூப்பரான பாத்திரவான்கள்), பலி புண்ணியம் கணக்கில் எழுதப்படுவதின் (imputed merit) அடிப்படையில் தேவ நீதி திருப்தி செய்யப்படக் கூடிய காலத்திற்கு முன்பே வாழ்ந்தார்கள், மற்றொரு வகுப்பார் (வாலிபரான பாத்திரவான்கள்) பலி புண்ணி யம் கணக்கில் எழுதப்படுவதின் அடிப்படையில் தேவ நீதி திருப்தி செய்யப்படக் கூடிய காலத்திற்குப் பின்பு வாழ்ந்தார்கள். பலி புண்ணியம் ஒருவனுடைய கணக்கில் எழுதப்படுவதின் மூலம் மட்டுமே அவன் பரம அழைப் பிற்குள் பிரவேசிக்கக் கூடும். இந்த இரு வகுப்பார்களும் தேவ நீதி மற்றும் மீட்கும் பலி என்பவைகளுக்கு முன்பாக சமமாக இருக்கிறார்கள். ஏனென்றால் இரு வகுப்பார்களும் பலி புண்ணியம் அவர்களுக்காக உபயோ கிக்கப்படுவதின் மூலம் தேவ நீதி திருப்தி செய்யப்படும் காலத்திற்கு முன்பே வாழ்ந்தார்கள்.*

*32. ஆகையால் மில்லினிய யுக வெகுமதிக் காகவும் ஊழியத்திற்காகவும் மூப்பரான பாத்திரவான் களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிப்பது தேவ நீதிக்கும் மீட்கும் பலி புண்ணியத்திற்கும் எவ்விதத்திலும் முரண் பாடாக இல்லாததை போலவே, அவர்களுக்கொத்த சூழ் நிலைகளின் கீழ் ஓடின வாலிபரான பாத்திரவான்களின் வெகுமதியாக, மில்லினிய யுகத்தில் மூப்பரான பாத்திர வான்களின் கூட்டாளிகளாக இருக்கும் சந்தர்ப்பத்தை அளிப்பது எவ்விதத்திலும் முரண்பாடானது அல்ல.*

## எபிப்பெனி பாளயத்தில் நடைபெறும் நியாயமாகுதல் - *PT 1975, P.12*

*33. 1954-ம் வருடம் முதல், எபிப்பெனி பாளயமானது, அதின் முற்றுப் பெறாத நிலையில் இருக் கிறது. அந்த நிலையில் அதில் மூன்று வகுப்புகள் இருக்கின்றன: 1) பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக் காரர்கள் - இவர்கள் பிரதிஷ்டை செய்த, ஆவியினால் பிரகாசிப்பிக்கப்பட்ட வகுப்பார் ஆவர். இவர்கள் ஆவி யினால் ஜெநிபிக்கப்பட்டவர்கள் அல்ல, இவர்கள் நிஜ நிறைவேறுதலான லேவி வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் அல்ல. 2) பிரதிஷ்டை செய்யாத, பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்கள். 3) நியாயமாக்கப்படாத, பெய ரளவிலான தேவ ஜனங்கள். முற்றுப்பெற்ற எபிப்பெனி பாளய காட்சியில், நியாயமாக்கப்படாத பாளயக்காரர் - கள், அதாவது, யெஷுவாஆவை தங்களுடைய சொந்த ரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள், அவர்களுடைய குணாம்சங்கள் எவ்வளவு நன்மையானவைகளாக இருந் தாலும், அதைப் பொருட்படுத்தாமல், அவர்கள் பாளயத் திலிருந்து வெளியேற்றப்பட்டு, பாளயத்திற்கு புறம்பே யுள்ள பகுதியினால் அடையாளப்படுத்தப்படுகிற நிலைக் குத் தள்ளப்படுவார்கள். அதாவது, நியாயமாக்கப்படாத வர்களின் நிலைக்கு தள்ளப்படுவார்கள் (PT 1940, p. 13; PT 1972, p. 70). முற்றுப்பெற்ற எபிப்பெனி பாளயத்திலுள்ள அனைவரும் நிச்சயமாக நீதியை அப்பியாசிக்க வேண்டும், அதே நேரத்தில் அவர்கள் தங்கள் ரட்சக ராகவும், ராஜாவாகவும் யெஷுவாஆவில் விசுவாசம் வைக்க வேண்டும் (E Vol.5, p.420). "இழந்ததைத் திரும்பக் கொடுத் தல்" துவங்கி, பரீட்சார்த்த ரீதியான "கிரியைகளினால்- நியாயமாகுதல்" ஆரம்பிக்கும் வரை, எபிப்பெனி பாளயத் திலுள்ளவர்கள் பரீட்சார்த்த ரீதியில் விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட வேண்டும் என்பதையும் இது அர்த்தப் படுத்தும்.*

## விசுவாசத்தினால் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலைப் பெற்ற வகுப்புகள் - *PTQB p.748*

*34. கர்த்தராகிய யெஷுவாஆ ஒவ்வொருவருக்காக வும் மரணத்தை ருசிபார்த்திருக்கிறார் என்ற உண்மையின் அடைப்படையில் (எபி. 2:9), தேவனிடம் விசுவாசத் தினால் நெருங்கிவருகிற சிலரின் சார்பாகக் கிறிஸ்துவின் பலி புண்ணியம் கணக்கில் எழுதப்படுவதற்கோ அல்லது உபயோகிக்கப் படுவதற்கோ முன்பே, அவர்களைப் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கி, தம்முடன் ஐக்கியத் திற்குள் ஏற்றுக்கொள்ள தேவன் பிரியமாக இருக்கிறார். அந்த வகுப்புகளாவன: (1) மூப்பரான பாத்திரவான்கள் - அவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு நீதியாக எண்ணப்பட்டது (எபி. 11:7; ரோம. 4:3, 18-22; யாக். 2:23), (2) சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்யாது, கர்த்தராகிய*

*யெஷுஆவை விசுவாசிப்பவர்கள் (ரோம. 10:4; 4:5; 12:1; அப் 13:38, 39), (3) பிரதிஷ்டை செய்தவர்களின் முதிர்ச்சி யடையாத பிள்ளைகள் (1 கொரி. 7:14), (4) வாலிபரான பாத்திரவான்கள் (யோயே2:28; E. Vol. 4, pp. 451, 452), (5) பிரதிஷ்டை செய்த எபிப்பெனி பாளயக்காரர்கள் (PT 1954, pp. 41, 42; PT 1955, pp. 41-44; PT 1957, pp. 23, 25; PT 1958. pp. 6, 7; PT 1959, pp. 41-43) மற்றும் (6) கர்த்தராகிய யெஷுஆவில் விசுவாசிக்கிற, ஆனால் பிரதிஷ்டை செய் யாத மற்ற எபிப்பெனி பாளயக்காரர்கள் (PT 1957, pp. 20-27; PT 1958, pp. 59-61, 91-93; PT 1959, pp. 36-41, 56, 57; PT 1960, pp. 89-92).*

*35.* விசுவாச யுகம் முழுவதும், பரீட்சார்த்த ரீதியான "விசுவாசத்தினால் நியாயமாகுதல்" என்ற படி, பிரதிஷ்டைக்கு முன்பு நிகழ வேண்டும் என்று வேதாகமம் தெளிவாகக் காண்பிக்கிறது. இதை நாம் ரோம. 5:1-ம் வசனத்தில் காண்கிறோம்: *"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே [பரீட்சார்த்த ரீதியாக] நியாயமாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக் கிறோம். அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் [பிரதிஷ்டை என்னும் கிருபை] பிரவேசிக்கும் சிலாக் கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண் டிருக்கிறோம் (ரோம. 12: 1 வசனத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்; P Vol 6 pp. 116, 121, par. 1, Foreword, vi; E Vol 5, p. 398, bottom; E Vol 6, p. 711).*

## உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல்

*36.* வேதாகமம் உயிரூட்டப்பட்ட நியாயமாகு தலைப் பற்றி நிச்சயமாகப் போதிக்கிறது. சுவிசேஷ யுகத்தில், நியாயமாக்கப்பட்ட ஒரு விசுவாசி, தான் பிரதிஷ்டை செய்யும் அளவிற்கு முழுமையாக விசுவா சிக்கும் போதும், தேவன் அவனுக்கு ஆவியினால் ஜெநிப்பித்தலை அளிக்கவிருக்கும் சற்று முன்பும், அவன் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலைப் பெற்றுக் கொள் வான் *(1 கொரி. 6:11; எபி. 10:14; 9:24; 1 யோவா. 2:2; யாக். 2:17-26).*

## உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலின் *(vitalized justification)* வேதாகம நிரூபணம் - *PT 1946, p.125*

*37.* சுவிசேஷ யுகத்தில் ஒருவன் தன்னைப் பிரதிஷ்டையில் ஒப்புவிக்கும் வரை அவனுடைய நியாயமாக்குதலுக்கு உயிரூட்டப்பட முடியாது என்று சில வேத வசனங்கள், விசேஷமாக எபிரெயர் புஸ்தகத் திலுள்ள வசனங்கள், தெளிவாகப் போதிக்கின்றன. அதாவது சுவிசேஷ யுகத்தில் ஒருவன் தன்னைப் பிரதிஷ்டையில் ஒப்புக் கொடுத்த பிறகு தான், பலி புண்ணியம் உண்மை நிகழ்வாக அவனுடைய கணக்கில் எழுதப்பட்டு *(actual imputation)*, அவன் மேலுள்ள ஆதாமின் தண்டனை உண்மை நிகழ்வாக ரத்து செய்யப்படும்.

*38.* இதை நாம் பல வேத வசனங்களிலிருந்து காண்கிறோம்: *"ஏனென்றால் பரிசுத்தமாக்கப்பட்டவர் களை (பிரதிஷ்டை செய்தவர்களை) ஒரே பலியினாலே (நிஜ நிறைவேறுதலான மகா பரிசுத்தத்தில் தம்முடைய ரத்தத்தை ஒருமுறை செலுத்துவதின் மூலம்) அவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தி இருக்கிறார் (ஆதா மினால் வந்த தண்டனையிலிருந்து நியாயமாக்கி இருக் கிறார்)."* பிரதிஷ்டை செய்வதற்கு முன்பு ஜீவனுக்கான நியாயமாகுதல், அதாவது உயிரூட்டப்பட்ட நியாயமாகு தல் இல்லை என்று இவ்வசனம் போதிக்கிறது *(எபி. 10:14). "கிறிஸ்துவானவர் ... பரலோகத்திலே தானே (நிஜ நிறைவேறுதலான மகா பரிசுத்தம்) இப்பொழுது (சுவி சேஷ யுகத்தில்) நமக்காக (சபைக்காக - மற்றவர்களுக்காக அல்ல; ஆகையால் சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்தவர்களுக்கு மட்டுமே அவர் அவருடைய பலி புண்ணியத்தை உண்மை நிகழ்வாகக் கணக்கில் எழுது கிறார்) தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி (தம்முடைய பலி புண்ணியத்துடன்) பிரவேசித்தார்" (எபி. 9:24). "நம்முடைய (சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்தவர்கள்) பாவங்களை (உண்மை நிகழ்வாக) நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே" (வசனத்தின் அடுத்த பகுதியில் இது உலகத்தின் பாவங்களோடு வேறுபடுத்தப்படுவதால், சுவிசேஷ யுகத்தில் சபை வகுப்பாரின் பாவங்கள் மட்டுமே உண்மை நிகழ்வாக நிவர்த்தி செய்யப்படுவதை அர்த்தப்படுத்துகிறது) (1 யோவா. 2:2).*

*39.* ஆதாமின் தண்டனையிலிருந்து விடுதலை அடைவதென்பது "கிறிஸ்து யெஷுஆவுக்குள்" நிகழ் கிறது *(ரோம. 3:24).* சபை வகுப்பார் பிரதிஷ்டை செய்வ தின் மூலம் மட்டுமே கிறிஸ்து யெஷுஆவுக்குள் வருகி றார்கள் *(ரோம. 6: 3; 1 கொரி. 12: 12, 13; கலா. 2: 16, 17; 2 கொரி. 5: 17).* இவ்வாறாக அவர்கள் பிரதிஷ்டை செய்த பிறகுதான் தேவன் அவர்களை ஜீவனுக்கென்று நியாய மாக்குகிறார், அதாவது அவர்களுடைய நியாயமாகு தலுக்கு உயிரூட்டுகிறார். அவர்கள் பிரதிஷ்டை செய்த பிறகு அவர்களுக்காக அவர்களுடைய கணக்கில் எழுதப் படும் பலி புண்ணியத்தை உண்மை நிகழ்வாக ஏற்றுக்கொள்வதின் மூலம் தேவன் அவர்களை ஜீவனுக் காக நியாயமாக்குகிறார். அவர்கள் பிரதிஷ்டை செய்வ தற்கு முன்பு தேவன் அவ்வாறு செய்யாததற்குரிய காரணம் மிக தெளிவாக இருக்கிறது. அது என்ன வென்றால், எந்த ஒரு நபருக்காகவும் பலி புண்ணியம் ஒரு முறை மட்டுமே உபயோகிக்கப்படக்கூடும் *(எபி. 10:18)* என்பதாகும். ஆகையால் பிரதிஷ்டை செய்வதற்கு முன்பே பலி புண்ணியம் அவர்களுடைய கணக்கில் உண்மை நிகழ்வாக எழுதப்பட்டால், யெஷுஆவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு பிரதிஷ்டை செய்யாத அனைவரும் இரண்டாம் மரணத்துக்குள் செல் வார்கள். அதாவது அவர்கள் பிரதிஷ்டை செய்வதற்கு முன்பே, அவர்கள் மேலுள்ள ஆதாமின் தண்டனையைத் தேவன் ரத்து செய்வதற்காக, அவர்களுடைய கணக்கில் யெஷுஆவின் பலி புண்ணியம் எழுதப்படுவதினால் வரும் நன்மையை யெஷுஆ இப்பொழுதே அவர்களுக்கு உண்மை நிகழ்வாகக் கொடுத்ததால், மில்லினிய யுகத்தில் இழந்ததைத் திரும்பக் கொடுக்கும் நோக்கங்களுக்காக அவருடைய பலி புண்ணியம் உபயோகிக்கப்படும்போது, அந்த வகுப்பாரிலிருக்கும் சந்தர்ப்பத்தை இவர்கள் பெற்றுக் கொள்ள முடியாது.

*40.* அப்படியானால், பிரதிஷ்டை செய்வதற்கு முன்பு கர்த்தராகிய யெஷு ஆவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்பவர்களின் நிலை நீதியின் தரத்திற்கு முன்பாக என்னவாக இருக்கும்? அது மூப்பரான பாத்திர வான்களின் நிலைக்கு ஒத்ததாக இருக்குமென்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவர்கள் ஜீவனுக்கென்று நியாய மாக்கப்படாமல், தேவனோடு ஐக்கியத்திற்கென்று நியாய மாக்கப்படுகிறார்கள். அதாவது பரீட்சார்த்த ரீதியில்

நியாயமாக்கப்படுகிறார்கள். ஏனென்றால் கிறிஸ்துவின் பலி புண்ணியம் கருதப்பட்ட நிலையில் மட்டுமே அவர்களுடைய கணக்கில் எழுதப்படுகிறது. ஆகையால் அவர்கள் மேலுள்ள ஆதாமின் தண்டனை அவர்களுக்கு இன்னும் உண்மை நிகழ்வாக ரத்து செய்யப்படவில்லை. அவர்கள் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக் கப்பட்டி ருக்கிறார்களா? ஆம் என்று நாங்கள் பதிலளிக்கிறோம். அவர்கள் உண்மை நிகழ்வாக உயிரூட்டப்பட்ட நியாய மாகுதலைப் பெற்றிருக்கிறார்களா? இல்லை. ஏனென் றால் கிறிஸ்துவின் பலி புண்ணியம் உண்மை நிகழ்வாக அவர்களுடைய கணக்கில் எழுதப்படவில்லை.

## உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் மற்றும் அதற்குப் பின் நிகழ வேண்டிய கிரியைகளினால் நியாயமாகுதல் – அதின் வேதாகம நிரூபணம் - *PT 1948, p.122*

*41. 1 கொரி. 6:11* - நியாயமாகுதலின் சில அம்சங் கள் பரிசுத்த ஆவியினால் நிறைவேற்றப்படுகின்றன என்பது வேதாகம போதனையாயிருக்கிறது. பரிசுத்த ஆவியினால் உருவாக்கப்படுகிற இந்த அம்சங்கள், ஒருவனுடைய விசுவாசத்தினாலும், கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் நிமித்தமும், உயிரூட்டப்பட்ட நியாய மாக்குதலில், தேவன் அவனுடைய பாவங்களை உண்மை நிகழ்வாக மன்னித்து, கிறிஸ்துவின் நீதியை அவனுடைய கணக்கில் உண்மை நிகழ்வாக எழுதி, உண்மை நிகழ்வாக அவனைத் தம்முடைய சிநேகிதனாக ஏற்றுக் கொண்ட பிறகு செயல்படுகின்றன. அதாவது விசுவாசத்தினால் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலின் அம்சம் உருவான பிறகு செயல்படுகிற அம்சங்களாக இருக்கின்றன. ஏனென்றால் இவ்விதமான நியாயமாகுதலை அடைந்த பிறகு அவன் நீதியாக ஜீவிக்க வேண்டும். இவ்வாறாக அவன் குணாம்சத்தில் மென்மேலும் நீதியுள்ளவனாக ஆக்கப்பட வேண்டும். நியாயமாகுதலின் இந்த அம்ச மானது, பரிசுத்தவான்களிலுள்ள தேவனுடைய மனஇயல் பாகிய பரிசுத்த ஆவியின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

*42. 1கொரி. 6:11*-ம் வசனமானது நியாயமாகு தலின் இந்த அம்சங்களைக் குறிப்பிடும் வேத வசனமா யிருக்கிறது: “உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களா யிருந்தீர்கள் [வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக் காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் … *(1கொரி. 6:9,10)]*; ஆயினும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்த மாக்கப்பட்டீர்கள், கர்த்தராகிய யெஷுஆவின் நாமத் தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் நியாயமாக் கப்பட்டீர்கள் (சரியான மொழி பெயர்ப்பு – *KJV* ஆங்கில வேதாகமம் பார்க்கவும்).” கொரிந்தியர்களில் சிலர் கர்த்தரிடத்திற்குத் திரும்புவதற்கு முன்பு, *9,10* வசனங் களில் குறிப்பிடப்பட்ட மிகவும் பொல்லாப்பானவை களைச் செய்த குற்றவாளிகளாக இருந்தார்கள் என்று அப்போஸ்தலர் அவர்களுக்கு நினைவுப்படுத்துகிறார். ஆனால் அடையாளமான ஆசாரியர்கள் தங்களுடைய சரீர ரீதியான அசுசியை நீக்க தங்களைக் கழுவிக் கொள் வதற்கு உபயோகித்த தண்ணீர் தொட்டியையும், ஆசரிப் புக் கூடார காட்சியையும் குறிப்பிட்டு, நிஜ நிறை வேறுதலான ஆசாரியர்களாயிருக்கிற இந்த பரிசுத்த வான்கள், நிஜ நிறைவேறுதலான ஆசரிப்புக் கூடார பிராகாரத்திலுள்ள தண்ணீர் தொட்டியை உபயோகித்து, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க *(2 கொரி. 7:1; எபே. 5:26; எபி. 10:22)* தங்களைக் கழுவிக் கொண்டிருந்தார்கள் (கழுவப்பட்டீர்கள்) என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். அவர் திரும்ப ஆசரிப்புக் கூடார காட்சியையும், அதில் ஆசாரியர்களின் பிரதிஷ்டை நிகழ்ந்த இடமாகிய முதல் திரையையும் (பிராகாரத்தை நோக்கி இருக்கும் பக்கத்தை) குறிப்பிட்டு, நிஜ நிறைவேறுதலான ஆசரிப்புக் கூடாரத்தின் முதலாம் திரையின் நிலையில் பரிசுத்தவான்கள் தங்களைப் பிரதிஷ்டை செய்தபோது, அவர்கள் சுயநலத்திலிருந்தும் உலகத்தனத்திலிருந்தும் பிரிக்கப்பட்டு, கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கப்பட்டிருந்தார்கள் (பரிசுத்தமாக்கப்பட்டீர் கள்). இவ்வாறாகக் கழுவப்படுதலும் பிரதிஷ்டையும் நிஜ நிறைவேறுதலான பிராகாரத்தில் நிகழ்கின்றனவென்பது காண்பிக்கப்படுகிறது.

*43.* இதைத் தொடர்ந்து வருகிற அடுத்த சொற் றொடரின் மூலம் (நியாயமாக்கப்பட்டீர்கள்) அவர் நிஜ நிறைவேறுதலான பரிசுத்தத்தில் நிகழுகிற ஏதேனுமொரு காரியத்தைக் குறிப்பிடுகிறார். நாங்கள் இதைச் சொல்வ தற்கு முதலாம் காரணமென்னவென்றால், ஆவியினால் ஜெநிப்பித்தல் என்பது பரீட்சார்த்த ரீதியில் நியாய மாகுதல் அடைந்தவுடனே நிகழாமல், உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் நிகழ்ந்தவுடனே, பரிசுத்தத்தில் நிகழ்ந்தது. ஆகையால் பரிசுத்தத்திற்குள் பிரவேசித்து, உயிரூட்டப் பட்ட நியாயமாகுதலை அடைந்த பிறகுதான், உடனே பரிசுத்த ஆவி அளிக்கப்பட்டது. நாங்கள் இதைச் சொல் வதற்கு இரண்டாம் காரணமென்னவென்றால் இவ் வசனத்தில் குறிப்பிடப்பட்ட நியாயமாகுதலானது தேவ னுடைய ஆவியினால் ஆகுகிறதாக இருப்பதால் (தேவனுடைய ஆவியினாலும் நியாயமாக்கப்பட்டீர்கள்), அது பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலாகவோ, உயிரூட் டப்பட்ட நியாயமாகுதலாகவோ இருக்க முடியாது. ஆகையால் அது உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் நிகழ்ந்த பிறகும், ஆவியினால் ஜெநிப்பித்தல் நிகழ்ந்தப் பிறகும் வருகிற ஒன்றாக இருக்க வேண்டும். ஆட்டு மயிரால் நெய்யப்பட்ட மூடுதிரைகளில் ஒன்று, முதலாம் திரைக்கு மேலாக இரண்டாக மடிக்கப்பட்டிருந்தது என்பதை நாம் நினைவு கூருவோம். பிராகாரத்தை நோக்கி இருக்கும் அதின் பக்கம் பரீட்சார்த்த ரீதியான நியாய மாகுதலையும், பரிசுத்தத்தை நோக்கி இருக்கும் அதின் பக்கம் ஜீவனுக்கான நியாயமாகுதலையும் அடையாளப் படுத்துகின்றன.

*44.* பரீட்சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப் பட்ட நியாயமாகுதலுக்குப் பிறகும், ஆவியினால் ஜெநிப்பித்தலுக்குப் பிறகும் எவ்விதமான நியாயமாகுதல் செய்யப்படுகிறது என்று கேள்வி எழும்புகிறது. நியாய மாகுதலின் முதல் இரண்டு பகுதிகளில் (பரீட்சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலில்) கிறிஸ்துவின் பலி புண்ணியத்தில் ஒருவன் வைக்கும் விசுவாசத்தினால் தேவன் அவனை நீதியுள்ளவனென்று அறிவிக்கிறார். ஆனால் இந்த நியாயமாகுதலானது, பரிசுத்தவான்களிலுள்ள தேவனுடைய மனஇயல்பின் மூலம் அவர்களை நீதியுள்ளவர்களாக்குகிறது. அந்த நியாயமாகுதல் அவர்களை மென்மேலும் நீதிமான்களாக ஆக்குகிறது. நிஜ நிறைவேறுதலான சமுகத்தப்ப மேஜை அண்டையில் ஒருவன் கடமை அன்பையும் (நீதி) தன்னலமற்ற அன்பையும் (தியாக அன்பு) அபிவிருத்தி செய்து கொள்ளும்போது இந்த நியாயமாகுதல் நடை பெறுகிறது. நம்மை விசுவாசத்தினால் நியாயமாக்கு பவராக யெஷுஆவின் அலுவலிலிருந்து தனிப்பட்ட

ஒன்றாக, நம்மை கிரியைகளினால் (யாக். 2:14-26) நியாய மாக்குபவராக யெஷுஆவின் அலுவல் செயல்படுத்தப் படுவதின் மூலமும் (யெஷுஆவின் நாமத்தினாலும் ... நியாயமாக்கப்பட்டீர்கள்) பரிசுத்தவான்களிலுள்ள தேவ னுடைய மனஇயல்பினாலும் செய்யப்படுகிறது (தேவ னுடைய ஆவியினாலும் நியாயமாக்கப்பட்டீர்கள்).

*45. E Vol.5, p. 483* கிறிஸ்துவின் நீதியானது, சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்தவர்களின் கணக் கில் எழுதப்படுவதின் மூலம், அவர்களுக்காகத் தேவ நீதியைத் திருப்தி செய்கிறது. நீதியின் 100% தரத்திற்கு அவர்களில் குறைவு பட்டதை கிறிஸ்துவின் நீதி நிறை வாக்கும். ஆனால் அவர்களால் இயன்ற வரை சிறப்பாக அவர்கள் நீதியை அப்பியாசிக்க வேண்டும் என்பதை இது அர்த்தப்படுத்தும். அவர்கள் அவ்வாறு செய்யும் போது, அவர்களை 100% நீதியுள்ளவர்களாக ஆக்குவதற்குத் தேவையான கிறிஸ்துவின் நீதி படிப்படியாகக் குறைந் துகொண்டே வரும். ஆகையால் அவர்களால் எந்த அளவிற்கு நீதியை அப்பியாசிக்கக் கூடுமோ, அந்த அளவிற்கு அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்று தேவன் அவர்களிடம் கோருகிறார். அதே நேரத்தில் அவர் களுடைய பலவீனத்தினாலும், அறியாமையினாலும் உண்டாக்குகிற தோல்விகளை அவர்களுடைய கணக்கில் எழுதப்பட்ட கிறிஸ்துவின் நீதியின் மூலம் மூடுகிறார். ஆகையால், விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் நீதி யான, நியாயமான குணம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்ள நாடுவார்கள். அதாவது கடமையான நல்லெண் ணத்துடன் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் தேவ னிடத்தில் அன்பு கூரவும், தங்களை நேசிப்பதைப் போல் பிறனை நேசிக்கவும் நாடுவார்கள். ஒருவேலை ஏதேனும் ஒரு அளவான விருப்பத்துணிவுடன் அவர்கள் தற்காலி கமாக இதைச் செய்ய தவறினால், சிட்சைகள் மற்றும் சீர்த்திருத்தலின் மூலம் அதற்கு ஈடுசெய்வார்கள். இவ் வாறாக அவர்கள் நீதியான குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்வார்கள்.

## பரீட்சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் – அவைகளுக்கிடையிலுள்ள ஒப்புமைகள் மற்றும் வேறுபாடுகள்

### விசுவாசத்தின் வகை

*46.* உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலின் பிரதி - ஷ்டை செய்யும் விசுவாசம் "பிஸ்டேயூன் ஐஸ்" (*pisteuein eis*) என்ற கிரேக்க வார்த்தையின் மூலம் குறிப்பிடப் படுகிறது. அது "ஒருவருக்குள் விசுவாசிப்பது" (*believe into*)என்பதை அர்த்தப்படுத்துகிறது (யோவா. 3:15, 16, 18, 36; 7:5, 31, 38, 39, 48; அப். 10:43; 14:23; 19:4; ரோம. 10:14; கலா. 2:15; 1 பேது. 1:21; 1 யோவா. 5:10, 13). ஆனால் பிரதிஷ்டை செய்யும் விசுவாசத்திலிருந்து தனிப்பட்ட ஒன்றாக நியாயமாக்கும் விசுவாசமானது "பிஸ்டேயூன் எப்பி" (*pisteuein epi*) என்ற கிரேக்க வார்த்தையின் மூலம் குறிப்பிடப்படுகிறது. அது "ஒருவன் மேல் விசுவாசம் வைப்பது" (*believe on*) அல்லது "ஒருவரிடத்தில் விசுவாசம் வைப்பது" என்பதை அர்த்தப்படுத்துகிறது (லூக். 24:25; அப். 9:42; 11:17; 16:31; 22:19; ரோம. 4:5, 24; 1 தீமோ. 1:16).

## இரு செயல்களும் பரலோகத்தில் நிறைவேற்றப்படுகின்றன

*47.* பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் மற்றும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் என்ற இரு செயல்களும் பரலோகத்தில் நிறைவேற்றப்படுகின்றன (எபி. 9:24). மிக சரியாகச் சொன்னால், எபி. 9:24 பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை அல்லாமல், உயிரூட்டப்பட்ட நியாய மாகுதலைக் குறிப்பிடுகிறது. ஆனால் நியாயமாகுதல் நிறைவேற்றப்படும் இடம் பரலோகம் என்று இவ்வசனம் போதிக்கிறது. ஆகையால் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலும் பரலோகத்தில் நிறைவேற்றப்படுகிறது என்று இவ்வசனம் மறைமுகமாகப் போதிக்கிறது. எபி 9:24-ம் வசனம் மறைமுகமாகப் போதிக்கிற இந்த கருத்து ரோம. 3:26,22 வசனங்களில் நேரடியாகப் போதிக்கப் படுகிறது. ரோம. 3:26-ம் வசனத்தில், கிறிஸ்து விசுவாசி யின் நீதியாக இருப்பதால் நிஜ நிறைவேறுதலான கிருபாச னம் (கிருபாசனம் என்பது சரியான மொழிபெயர்ப்பாகும் - கிறிஸ்து யெஷுஆவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே கிருபாசனமாக (*hilasterion*) அவரையே ஏற்படுத்தினார்) என்று அழைக்கப்படுகிறார். நிஜ நிறை வேறுதலான கிருபாசனம் என்பது நிஜ நிறைவேறுதலான மகா பரிசுத்தமாகிய பரலோகத்திலிருக்கிறது. ஆனால் ரோம. 3:22-ம் வசனத்தில் கிறிஸ்து விசுவாசிக்கிற எவர் களுக்கும் நீதியாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆகையால் நியாயமாக்கப்பட்ட மற்றும் பிரதிஷ்டை செய்த விசுவாசிகள் இருவருக்கும் கிறிஸ்து நீதியாக இருக்கிறார். ஆகையால் இந்த இருவகையான நியாயமாகுதலும் பரலோகத்தில் நிறைவேற்றப்படு கின்றன.

### மற்ற முக்கியமான வேறுபாடுகள்

*48.* பரீட்சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப் பட்ட நியாயமாகுதலுக்கு இடையிலுள்ள முக்கியமான வித்தியாசங்கள் இவ்வாறாயிருக்கின்றன: (1) தேவ நீதி யைப் பொருத்தவரை - பரீட்சார்த்த ரீதியான நியாய மாகுதலானது கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் மூலம் தேவநீதி (முழுமையாக) திருப்தி செய்யப்படாமலே செயல்படும், ஆனால் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் என்பது கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் மூலம் தேவ நீதி (முழுமையாக) திருப்தி செய்யப்படுவதினால் செயல் படுகிறது; (2) கிறிஸ்துவின் பலி புண்ணியம் பொருத்த வரை - அதில் ஈடுபடுகிற நபரின் நலனுக்காகக் கிறிஸ்து வின் நீதி அவனுடைய கணக்கில் எழுதப்படாமலே பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் செயல்படும், ஆனால் அந்த நபரின் கணக்கில் கிறிஸ்துவின் நீதி எழுதப் படுவதின் மூலம் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் செயல் படும்; (3) அதைப் பெற்றுக் கொள்கிற நபரின் செயல் களைப் பொருத்தவரை - அந்த நபர் பிரதிஷ்டை செய்யா மலே, சம்பந்தபட்ட காரியங்களைப் பற்றிய தேவ வார்த்தையின் போதனைகளில் விசுவாசம் வைப்பதின் மூலம் மட்டுமே பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதல் கிரியை செய்யும், ஆனால் அவ்வித விசுவாசத்துடன் பிரதிஷ்டை இருக்கும் போது மட்டுமே உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் கிரியை செய்யும்; (4) கணக்கில் எழுதப் படும் காரியங்களைப் பொறுத்தவரை - பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலில் அதின் விசுவாசம் உண்மை நிகழ்வாகக் கணக்கில் எழுதப்படுகிறது, கிறிஸ்துவின்

பலி புண்ணியம் கணக்கில் எழுதப்பட்டதாகக் கருதப் படுகிறது, இவ்விரண்டும் விசுவாசியின் நீதியாக எண்ணப்படுகின்றன (ரோம. 3: 21-28; 4: 3-8, 21-25; 10: 4), ஆனால் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலில் அதின் விசுவாசமும் கிறிஸ்துவின் பலி புண்ணியமும் உண்மை நிகழ்வாகக் கணக்கில் எழுதப்பட்டு நீதியாக எண்ணப் படுகின்றன (கலா. 2: 16-20; 3: 22; பிலி. 3: 9) [இவ்வசனங் களில் "யெஷுஆ கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம்" என்பது "யெஷுஆ கிறிஸ்துவின் விசுவாச உண்மைத் துவம்" என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும் -அது கர்த்தராகிய யெஷுஆவின் விசுவாச உண்மைத் துவத் தை, அவருடைய நீதியை அர்த்தப்படுத்துகிறது]; (5) ஆதாமின் தண்டனையைப் பொறுத்தவரை - பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலில் ஆதாமின் தண்டனை ரத்து செய்யப்படுவதில்லை, ஆனால் உயிரூட்டப்பட்ட நியாய மாகுதலில் ஆதாமின் தண்டனை ரத்து செய்யப்படுகிறது; (6) தேவனோடு ஐக்கியத்தைப் பொறுத்தவரை - பரீட் சார்த்த ரீதியான நியாயமாகுதல் தேவனோடு ஓரளவான ஐக்கியத்தை அளிக்கும், உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் முழுமையான ஐக்கியத்தை அளிக்கும்; (7) தேவனோடு உடன்படிக்கை பந்தங்களுக்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பங்களைப் பொறுத்தவரை - பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலானது,தேவனோடு ஒரு கிருபையின் உடன் படிக்கையின் பந்தத்திற்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தை எப்போதுமே அளித்தாலும், தேவனோடு சாராள் உடன் படிக்கை பந்தத்திற்குள் பிரவேசிப்பதற்கான சந்தர்ப் பத்தை எல்லா நேரங்களிலும் திறந்து வைக்காது - இதை நாம் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் காரியத்தில் காண்கிறோம், ஆனால் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலானது தேவனோடு சாராள் உடன்படிக்கை பந்தத்திற்குள் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தை எப்பொ முதுமே அளிக்கும்.

## நியாயமாகுதலில் கணக்கில் எழுதப்படும் காரியங்கள் அதின் வேதாகம அடிப்படை

*49.* சுவிசேஷ யுக நியாயமாகுதலில் விசுவாசம் நீதியாகக் கணக்கில் எழுதப்படுவது மட்டுமல்ல, கிறிஸ்து வின் பலி புண்ணியமும் (அவருடைய மரணம் மற்றும் நீதியின் புண்ணியம்) தேவநீதியின் கணக்கிலும், சபை வகுப்பாரின் கணக்கிலும் எழுதப்படுகிறது.

*50.* கர்த்தராகிய யெஷுஆ ஆதாமினால் இழக்கப் பட்ட காரியங்களைக் கிரயத்திற்குக் கொள்வதற்கு மீட்கும் கிரயத்தை உபயோகித்த பிறகு, தேவன் அதைத் திரும்பக் கர்த்தராகிய யெஷு ஆவுக்கு அவருடைய உடைமையாக அளிக்கிறார் என்று நாம் பின்வரும் உண்மைகளிலிருந்து அறிந்து கொள்கிறோம்: (1) ஆசாரி யத்துவத்துவத்தின் உருவகத்தில், ஆரோன் ரத்தத்தைக் கிருபாசனத்தின் மேல் தெளிப்பது மட்டுமல்ல (தேவ நீதியைத் திருப்தி செய்வது), பலி பீடத்திற்காகவும் பிராய சித்தம் செய்தார் (சபை வகுப்பாரின் மனுஷீகத்தை கருதப் பட்ட நிலையில் பூரணமாக்கினார்),

*51.* (2) மத்தியஸ்தரின் உருவகத்தில் மோசே காளைகள் மற்றும் வெள்ளாட்டுக் கடாக்களின் ரத்தத் தைப் புத்தகத்தின் மேல் தெளிப்பது மட்டுமல்ல (தேவ நீதியைத் திருப்தி செய்வது), ஜனங்களின் மேலும் தெளித்தார் (ஜனங்களுக்கு அவருடைய பலி புண்ணி யத்தை அருளுவதின் மூலம் அவர்களைப் பூரணநிலைக்கு தூக்கி நிறுத்துவது).

*52.* (3) யோவா. 6:27-58 மற்றும் யோவா. 3:15,16 வசனங்களும் பலி புண்ணியம் இந்த இரு வகைகளில் உபயோகிக்கப்படுவதைக் காண்பிக்கின்றன. ஏனென் றால் குமாரன், கொடுத்த மீட்கும் பலி மரண தண்ட னையை ரத்து செய்து (கெட்டு போகாமல்) பூரணத் துவத்தையும் அளிக்கிறது (நித்திய ஜீவன் அடைவது) என்று யோவா. 3:15, 16 வசனங்கள் காண்பிக்கின்றன. நித்திய ஜீவன் வரைக்கும் நிலை நிற்கிற போஜனம் குமாரரால் கொடுக்கப்படுகிறது என்று யோவா. 6:27-58 வசனங்கள் காண்பிக்கின்றன. அவருடைய மாம்சமே அந்த போஜனமாக இருக்கிறது (யோவா 6:55). யோவா 6:33 வசனத்தில் அது அவருடைய மனுஷீகத்தைக் குறிக் கிறதென்றும், அது உலகத்தின் பாவங்களை மன்னிப்பது மட்டுமல்ல, உலகத்திற்கு ஜீவனையும் கொடுக்கிறது என்றும் கர்த்தர் காண்பிக்கிறார். யோவா. 6:50-ம் வசனத்தில், ஒரு நபர் கர்த்தருடைய மனுஷீகத்தைத் தனக்குரியதாக ஆக்கிக் கொள்ளும்போது, அது அவனை மரணத்திலிருந்து காப்பாற்றும் என்று, அதாவது மரண தண்டனையிலிருந்து அவனை விடுவித்து, விடுவிக்கப் பட்ட நிலையில் அவனைக் காத்துக் கொள்ளும் என்று காண்பிக்கிறது. யோவா. 6:51 வசனமானது, அவருடைய மனுஷீகத்தைத் தனதாக்கிக் கொள்கிறவனுக்கு ("புசிக் கிறவன்") நித்திய ஜீவனை அளிப்பதற்காக, உலகத்தின் ஜீவனுக்காக அவர் கொடுக்கும் காரியம் அவருடைய மனுஷீகம் என்பதைக் காண்பிக்கிறது. ஆகையால் யோவா. 6:27-58 வரையுள்ள வசனங்கள் பின்வரும் காரியங்களைக் காண்பிக்கின்றன: நம்முடைய கர்த்த ருடைய மரணமானது (a) சபை மற்றும் உலகத்தாரின் பாவங்களை ரத்து செய்வது மட்டுமல்ல, (b) அவர் பலியில் ஒப்புக் கொடுத்த காரியங்களாகிய அவருடைய மனு ஷீகம், அவருடைய ஜீவ உரிமை மற்றும் ஜீவாதார உரிமைகள் ஆகியவற்றை தனதாக்கிக் கொள்கிறவனுக்கு நித்திய ஜீவனையும் அளிக்கும். இவ்வசனங்களில் அவரு டைய மாம்சமென்பது அவருடைய மனுஷீகத்தையும், அவருடைய ரத்தமென்பது அவருடைய மனுஷீக ஜீவ உரிமை மற்றும் மனுஷீக ஜீவாதார உரிமைகளையும் குறிக் கின்றன.

*53.* (4) கர்த்தருடைய இராப்போஜனத்திலும் இதே கருத்து போதிக்கப்படுகிறது: சபை வகுப்பார் அப்பத்தைப் புசிப்பதென்பது, அவர்கள் பாவ மன்னிப்பை தங்களுக்குரியதாக ஆக்கிக் கொள்வது மட்டுமல்ல, அவர் என்னவாக இருந்தாரோ (பூரண ஜீவ உரிமை மற்றும் ஜீவாதார உரிமைகளுடைய பூரண மனுஷன்) அதையும் அவர்கள் தங்களுக்குரியதாக ஆக்கிக் கொள்வதை அடையாளப்படுத்தும். "இது உங்களுக் காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக் கிறது" [சரீரத்தை அடையாளப்படுத்துகிறது]. கர்த்தரு டைய இராப்போஜனத்தில் இந்த காரியங்கள் அடை யாளப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாயிருக் கிறது. இராப்போஜனத்தைப் பற்றிய இந்த காரியத்தை புரிந்து கொள்ளுவதற்கு யோவா. 6-ம் அதிகாரம் நமக்கு உதவுகிறது.

*54.* (5) எபி. 10:14 வசனமானது, கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்துவின் பலி புண்ணியத்தைக் கொண்டு அவர் சபை வகுப்பாருக்குப் பாவ மன்னிப்பை நிச்சயிப் பது மட்டுமல்ல, சபை வகுப்பாரின் மனுஷீகத்தையும் பூரணப்படுத்துகிறார் என்று நமக்குக் காண்பிக்கிறது.

*55.* (6) கர்த்தராகிய யெஷுஆ இரண்டாம் ஆதா மாக இருப்பதால், ஒரு தகப்பனாகத் தமக்குச் சொந்த மான ஜீவனை உலகத்தாருக்குக் கொடுக்கிறார், சபை

வகுப்பாருக்கு அதைக் கணக்கில் எழுதுகிறார். பாவ மன்னிப்புக்குக் கூடுதலாக இதையும் செய்கிறார்.

*56.* *(7)* நியாயமாகுதலிலும் இதே காரியங்கள் கிரியை செய்கின்றன: தேவன் சபை வகுப்பாரின் பாவங்களை மன்னிக்கிறார். மேலும் கிறிஸ்துவின் நீதியை அவர்களுடைய நீதியாக அவர்களுடைய கணக்கில் எழுதுகிறார் (ரோம. *3: 21, 22; 10: 4; 1* கொரி. *1: 31; 2* கொரி. *5: 21;* கலா. *2: 16; 3: 22;* பிலி. *3: 9*). யெஷுஆவின் பலி புண்ணியமானது மரண தண்டனையை ரத்து செய்வது மட்டுமல்ல, பூரண மனுஷீகத்தையும், அதனோடு வரும் உரிமைகளையும் சபை வகுப்பாருக்குக் கருதப்பட்ட நிலையிலும், உலகத்தாருக்கு உண்மை நிகழ்வாகவும் அளிக்கிறது என்று இந்த ஏழு நிரூபணங்கள் காண்பிக்கின்றன.

## சுவிசேஷ யுக நியாயமாகுதலின் செயல்முறை கணக்கில் எழுதப்படுவதின் மூலம் நிகழ்கிறது - *PT 1930, pg.9-13*

*57.* நியாயமாகுதல் என்பது ஒரு நீதிமன்றத்தில் நடைபெறும் காட்சியின் ஒரு அம்சமாக இருக்கிறது. தேவன் நியாயாதிபதியாக இருக்கிறார் என்பதையும், அவருடைய நீதி சட்டமாக இருக்கிறது என்பதையும், பாவியான ஒருவன் குற்றஞ் சாட்டப்பட்டவனாக இருக்கிறான் என்பதையும், கிறிஸ்து வழக்கறிஞராக (பரிந்து பேசுபவராக) இருக்கிறார் என்பதையும் அர்த்தப்படுத்தும். தேவநீதி குற்றவாளியிடமிருந்து கோருகிற இரு காரியங்களிலும் கிறிஸ்து அதை திருப்தி செய்கிறார். தேவநீதி கோரும் இரு காரியங்களாவன:*(1)* அவன் சட்டத்தை மீறினதினால் குற்றவாளியாக இருக்கிறான், ஆகையால் நீதி அவனுடைய மரணத்தை கோருகிறது, இதற்கு கூடுதலாக *(2)* அவன் நீதியின் பிரமாணங்களுக்கு பூரணமாக கீழ்ப்படிய வேண்டுமென்றும் தேவ நீதி கோருகிறது, பாவியானவன் இந்த கோரிக்கையையும் நிறைவேற்ற இயலாதவனாக இருக்கிறான். பரிந்து பேசுபவராக, யெஷுஆ நீதியின் இந்த இரு கோரிக்கைகளையும் திருப்தி செய்கிறார் – *(1)* அவர் பரமேறின பிறகு தம்முடைய ரத்தத்தினால் அடையாளப் படுத்தப்படுகிற தம்முடைய மரணத்தை பரலோகத்தில் செலுத்தினார். இது பாவியின் மரணத்திற்காக தேவ நீதியைத் திருப்தி செய்தது, *(2)* ஒரு பூரண மனிதனாக அவர் சம்பாதித்த நீதியானது, நீதியின் எல்லா பிரமாணங்களுக்கும் பாவியின் பூரண கீழ்ப்படிதலை கோருகிற தேவ நீதியின் கோரிக்கைகளைத் திருப்தி செய்தது.

*58.* விசுவாசத்தினால் நியாயமாகுதல் செயல்படும் காலத்தில் கிறிஸ்துவின் நீதி தேவனை நோக்கியும் மனுஷனை நோக்கியும் உடனடியாக அளிக்கப்படுகிறது. அவ்வாறு அளிக்கப்படுவதற்கான ஒரே வழி, கணக்கில் எழுதப்படுவதென்பதாக இருக்கவேண்டும். ஏனென்றால் சீர்கேடடைந்த ஒரு குணாம்சத்தை உடனடியாக ஒரு நீதியுள்ள குணாம்சமாக மாற்ற முடியாது. ஆனால் அந்த குணாம்சத்திற்கு நீதியைக் கணக்கில் எழுதுவது உடனடியாகச் செய்யப்படக்கூடும். ஆகையால் தேவனை நோக்கியும் மனுஷனை நோக்கியும் கிறிஸ்துவின் நீதி உடனடியாக அளிக்கப்பட வேண்டுமானால் அது கணக்கில் எழுதப்படுவதின் மூலம் மட்டுமே செய்யப்படக் கூடும். ஏனென்றால் ஒரு குணாம்சத்திற்கு நீதியை உண்மை நிகழ்வாக உடனடியாகக் கொடுப்பதென்பது அர்த்தமில்லாத ஒன்றாகும். ஏனென்றால் குணாம்சத்தை உருவாக்குவதென்பது படிப்படியாகச் செய்யப்பட வேண்டிய ஒரு செயல்முறையாகும். நீதியை உண்மை நிகழ்வாக உடனடியாக அளிப்பதென்பது குணாம்ச அபிவிருத்தி என்ற செயல்முறையை ஒன்றுமில்லாததாக ஆக்கிவிடும்! ஆகையால் ஒரு விசுவாசி பிரதிஷ்டை செய்வதற்குமுன்பு கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் ஒரு பகுதியாக அவருடைய மனுஷீக நீதி (புது சிருஷ்டியின் நீதி அல்ல) அந்த விசுவாசிக்காகவும் அவனுடைய கணக்கிலும் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது (இதை “பரீட்சார்த்த ரீதியில் கணக்கில் எழுதப்படுவது” – *tentative imputation-* என்றும் கூறலாம்). அந்த விசுவாசி பிரதிஷ்டை செய்த பிறகு, உயிரூட்டப்பட்ட விதத்தில் அவனை நியாயமாக்குவதற்கு, கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் ஒரு பகுதியாக அவருடைய மனுஷீக நீதி (புது சிருஷ்டியின் நீதி அல்ல), அந்த விசுவாசிக்காகவும் அவனுடைய கணக்கிலும் (உண்மை நிகழ்வாக) எழுதப்படுகிறது *(actual imputation)*. கிறிஸ்துவின் மனுஷீக நீதி ஒரு விசுவாசியின் கணக்கில் எழுதப்பட்டால், அதற்கு முன்பே அவனுக்காகத் தேவ நீதிக்கு அது செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

*59.* ஆகையால் நியாயமாகுதல் என்ற செயல்முறையில் மூன்று விதமான கணக்கில் எழுதப்படுகிற காரியங்கள் இருக்கின்றன: *(1)* கிறிஸ்துவின் மரணத்தின் புண்ணியம் மற்றும் நீதி விசுவாசிக்காகத் தேவ நீதியின் கணக்கில் எழுதப்படுகிறது, *(2)* அவருடைய நீதி (தேவையான அளவிற்கு) விசுவாசியின் கணக்கில் எழுதப்படுகிறது, *(3)* நீதியின் ஒரு பகுதியாகிய விசுவாசம் (கிரியைகளினால் நிரூபிக்கப்பட்ட விசுவாசம்), நீதியாக (அவனுடைய சொந்த நீதியாக) விசுவாசியினுடைய கணக்கில் எழுதப்படுகிறது. அதாவது பிதா விசுவாசியை நியாயமாக்க வேண்டுமானால், இவைகளெல்லாம் அவனிடம் இருக்க வேண்டுமென்று அவர் நிச்சயமாகக் கோருகிறார்.

*60.* இதற்குக் கூடுதலாக “ஒரு காரியத்திற்குப் பதிலாக மற்றொரு காரியம் ஏற்றுக் கொள்ளப்படுவதென்பது” *(substitution)*, பரிந்து பேசுபவரின் (நீதிமன்றத்தில் வழக்காடுபவரின்) வேலையின் ஒரு விசேஷித்த வேலையாகும். அதாவது கர்த்தராகிய யெஷுஆ சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்தவர்களின் வழக்கறிஞராக (பரிந்து பேசுபவராக) இருக்கிறார். அவர்கள் சார்பாக அவர் நீதிமன்றத்தில் செயல்படுகிறார். தெய்வீக நீதிமன்றத்தில் அவர் விசுவாசிகளை உடனடியாக நியாயமாக்குவதற்குத் தேவ நீதி அவர்களிடம் கோருகிற இரு காரியங்களை உடனடியாகத் திருப்தி செய்வதற்கு *(1)* அவர்களுடைய மரண தண்டனைக்கு ஈடாகவும் அதற்குப் பதிலாகவும் அவருடைய மரணத்தை வைக்கிறார், *(2)*, அவர்களில் குறைவுப்பட்ட நீதிக்கு ஈடாக, அவருடைய நீதியைப் போதுமான அளவிற்கு அளிக்கிறார், *(3)* அவர்கள் நியாயமாக்கப்பட்ட பிறகு செய்கிற பாவங்களை உடனடியாக மூடுவதற்கு அவருடைய நீதி எவ்வளவு தேவைப்படுகிறதோ அவ்வளவையும் அளிக்கிறார் (1யோவா. *2:1,2*). ஆகையால் அவர்களை நியாயமாக்கும் படி பரத்துக்குரிய நீதி மன்றத்தில் செய்யப்படும் இந்த காரியங்களெல்லாம் கணக்கில் எழுதப்பட்டவைகளாக இருக்க வேண்டுமென்பதை இது நிரூபிக்கிறது. ஏனென்றால் (நீதியைப் பொருத்தவரை) ஒரு காரியத்திற்குப் பதிலாக மற்றொரு காரியம் ஏற்றுக் கொள்ளப்படுவதென்பது கணக்கில் எழுதப்பட்ட (கருதப்பட்ட) ஒன்றாக மட்டுமே இருக்கக் கூடும்.

*61.* மீட்பர் செய்யும் வேலையானது இரு வகை

களில் செய்யப்படக் கூடும்: (1) அவருடைய பலி புண்ணியத்தைக் கடனாகக் கொடுப்பதின் மூலம் கருதப்பட்ட நிலையில் கிரயத்திற்குக் கொள்ளப்படக் கூடும் (reckoned purchase), அல்லது (2) உண்மை நிகழ்வாகக் கிரயத்திற்கு கொள்ளப்படக்கூடும் (actual purchase). ஆனால் பரிந்து பேசுபவரின் வேலையானது கணக்கில் எழுதப்படுவதின் மூலம் மட்டுமே செய்யப்படக் கூடும். ஏனென்றால் ஒரு பரிந்து பேசுபவரின் வேலையே "ஒரு காரியத்திற்குப் பதிலாக மற்றொரு காரியத்தை வைப்பதென்பதாகும்" (substitution). ஆகையால் இயல்பாகவே அது கணக்கில் எழுதப்படும் ஒன்றாக இருக்க வேண்டும். கணக்கில் எழுதப்படுவதின் மூலமேயன்றி, மற்றொருவருடைய மரணம் எவ்வாறு விசுவாசிகளுடையதாக ஆகக்கூடும்? கணக்கில் எழுதப்படுவதின் மூலமேயன்றி, மற்றொருவருடைய நீதி உடனடியாக அவர்களுடைய நீதியாக எவ்வாறு ஆகக்கூடும்? ஆனால் அவருடைய மரணம் அவர்களுடையதாக ஆகிறது (ஏசா. 53: 3-12; 1 கொரி. 15: 3; 2 கொரி. 5: 19; 1 யோவா. 2: 2). அவருடைய நீதி உடனடியாக அவர்களுடையதாக ஆகிறது (ரோம. 4: 20-26; 10: 4; 1 கொரி. 1: 31; 2 கொரி. 5: 21; கலா. 2: 16; 3: 22; பிலி. 3: 9; முதலாம் மற்றும் கடைசி மூன்று வசன குறிப்புகளில் யெஷுஆவின் விசுவாசம் என்ற சொற்றொடரானது ஒரு மனிதனாகிய யெஷுஆ கிறிஸ்துவின் விசுவாச உண்மைத்துவத்தை, அவருடைய நீதியை அர்த்தப்படுத்தும்).

*62.* சுவிசேஷ யுக நியாயமாகுதலில் நடக்கிற எல்லா காரியங்களும் கணக்கில் எழுதப்பட்டவைகளாக இருக்கின்றன. இவ்வாறாக அந்த நியாயமாகுதலில், அவர்களிடமிருந்து மரணம் நீக்கப்படுவதென்பது, உண்மை நிகழ்வான ஒன்றாக அல்லாமல் கருதப்பட்ட ஒரு காரியமாக இருக்கிறது. அது போலவே அந்த நியாயமாகுதலில் அவர்களுக்கு அளிக்கப்படுகிற பூரணமான (மனுஷீக நிலையில்) நித்திய ஜீவனும், உண்மை நிகழ்வான ஒன்றாக அல்லாமல், கருதப்பட்ட ஒன்றாக இருந்தது. இல்லாவிட்டால் அவர்கள் மரண செயல்முறையின் கீழ் இருந்திருக்க மாட்டார்கள். ஒரு வேலை அவர்கள் பலி செய்து மரிக்காதிருந்தாலும் கூட, மரண செயல்முறையின் கீழ் இருந்திருப்பார்கள். மேலும் அவர்கள் பூரண சரீரங்கள் உடையவர்களாக இருந்திருப்பார்கள் (யோவா. 5 :27,28; 1 யோவா. 5:12). மேலும் அவர்களுடைய பூரணத்துவம் உண்மை நிகழ்வான ஒன்றாக அல்லாமல் கருதப்பட்ட ஒரு காரியமாக இருந்தது (எபி. 10:14). இல்லாவிட்டால் அவர்கள் உண்மை நிகழ்வாக பிழையற்றவர்களாக இருந்திருப்பார்கள்.

*63.* சுவிசேஷ யுகத்தில் விசுவாசம் நீதியாக கணக்கில் எழுதப்பட்டதென்பதில் சந்தேகமில்லை (ரோம. 4:3-8,23-25); மேலும் கிறிஸ்துவின் மனுஷீக நீதியில் அவர் அவர்களுடைய நீதியாக ஆக்கப்பட்டிருந்தார் என்பதிலும் சந்தேகமில்லை (ரோம. 3: 21-26; 10: 4; 1 கொரி. 1: 31; 2 கொரி. 5: 21; கலா. 2: 16; 3: 22; பிலி. 3: 9; மேலே சுட்டிக்காட்டப்பட்டதைப் போலவே, முதலாம் மற்றும் கடைசி மூன்றாம் வசன குறிப்புகளிலுள்ள "யெஷுஆ கிறிஸ்துவின் விசுவாசம்" என்ற சொற்றொடரானது, ஒரு மனிதனாகக் கிறிஸ்துவின் விசுவாச உண்மைத்துவத்தை, அதாவது அவருடைய நீதியை அர்த்தப்படுத்துகிறது). விசுவாசத்தினால் நியாயமாகுதல் கிரியை செய்யும் காலத்தில், கிறிஸ்துவின் மனுஷீக நீதி கணக்கில் எழுதப்படுவதின் மூலம் மட்டுமே மற்றொருவருக்குக் கொடுக்கப்படக் கூடும். ஒரு நீதிமன்றத்திற்குரிய காட்சியில், பரிந்து பேசுபவர் தேவனை நோக்கி பலி புண்ணியத்தை உபயோகிப்பதென்பதும் கணக்கில் எழுதப்பட்ட ஒரு காரியமாக இருக்க வேண்டும் என்று மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஒருவனுக்குப் பதிலாக மற்றொருவரின் புண்ணியம் கொடுக்கப்படும்போது அது அவருடைய கணக்கில் எழுதப்பட வேண்டும்.

*64.* சுவிசேஷ யுக நியாயமாகுதல் கணக்கில் எழுதப்படும் ஒரு காரியமாக இருக்கிறதென்பதை மற்றொரு உண்மையும் நிரூபிக்கிறது: சுவிசேஷ யுகத்தில் பிரதிஷ்டை செய்கிற ஒவ்வொருவருடைய குறைபாடுகளை நிறைவாக்கி, அவரைப் பூரணநிலைக்குக் கொண்டு வருவதற்கு, ஒவ்வொருவருக்கும் கர்த்தருடைய பலி புண்ணியம் எவ்வளவு தேவைப்படுகிறதோ, அவ்வளவு பலி புண்ணியம் மட்டுமே அவர்களுடைய கணக்கில் எழுதப்படும். அவருடைய முழு பலி புண்ணியம் அவர்களுடைய கணக்கில் எழுதப்படுவதில்லை. யூபிலி அடையாளத்திலுள்ள மீட்கும் பலி சம்பந்தப்பட்ட சில அம்சங்களிலிருந்து இந்த கருத்து தெளிவாகிறது: ஒரு அடிமையையோ அல்லது ஒரு நிலத்தின் பகுதியையோ மீட்டு கொள்வதற்குச் செலுத்தப்பட வேண்டிய கிரயமானது, அடுத்துவரும் யூபிலிக்கு முன் இன்னும் எவ்வளவு காலமிருக்கிறதோ, அந்த கால அளவிற்கேற்ப வெவ்வேறாக இருக்கும். இது ஜனங்களின் வெவ்வேறு அளவான அபூரணத்திலிருந்து அவர்கள் ஒவ்வொருவரையும் பூரண நிலைக்குக் கொண்டு வரும்படி கருதப்பட்ட நிலையில் கிரயத்திற்குக் கொள்ளும்போது தேவைப்படும் வெவ்வேறு அளவான மீட்கும் பலி புண்ணியத்தை அடையாளப்படுத்துகிறது (ஆனால் இந்த கருத்து ஒரு கடனுக்குப் பொருந்தாது. கடனை பொருத்தவரை முழு தொகை செலுத்தப்பட வேண்டும் - இது மரணத்தில் ஒப்புவிக்கப்பட்ட முழு மனுஷீகத்தையும், மீட்கும் பலியைக் கொடுப்பதின் மூலம் தீர்க்கப்பட்ட அந்த முழு கடனையும் அடையாளப்படுத்துகிறது).

*65.* இவ்விதமான ஒரு நடவடிக்கையானது, மீட்கும் பலியின் தேவையான பகுதிகள், தேவைக்கு ஏற்ப எவ்வாறு தனி நபர்களுக்குக் கடனாக அளிக்கப்படுகின்றன என்பதை அடையாளப்படுத்துகிறது. அதாவது ஒவ்வொரு நபரையும் மனுஷீக பூரண நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவைப்படுமளவிற்குப் பலி புண்ணியம் கடனாகக் கொடுக்கப்படும். பூரண மனுஷீக நிலை என்பது யூபிலி நிலையின் மூலம் (இழந்ததைத் திரும்பக் கொடுத்தல்) அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த பரிவர்த்தனையின் இதே அடிப்படை கொள்கை பரிந்து பேசுபவரின் உருவகத்திற்கும் பொருந்துமென்று 1யோவா. 2:1,2 வசனங்கள் காண்பிக்கின்றன. சபை வகுப்பார் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலையும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலையும் அடைந்த பிறகும் கூட பெலவீனத்தினாலும் அறியாமையினாலும் செய்யும் பாவங்களைப், பரிந்து பேசுபவர் தேவ நீதிக்கு முன்பாகச் சரி செய்வாரென்று இவ்வசனம் காண்பிக்கிறது. பரிந்து பேசுபவர் என்ற உருவகமே கணக்கில் எழுதப்படுவது என்ற காரியத்தை நிரூபிக்கிறது.

*66.* *(E Vol. 8, p.533-535)* எபி. 1:3 –ம் வசனத்தின்படி, நம்முடைய கர்த்தர் பரமேறின போது, முழு சபைக்காக அவருடைய புண்ணியத்தை பொதுவாகக் கணக்கில் எழுதினார். இது சுவிசேஷ யுக இரட்சிப்பை செயல்படக் கூடிய ஒன்றாக ஆக்கிற்று. ஆனால் தனி நபர்கள் தனிப்பட்ட முறையில் அதைத் தங்களுக்கென்று பயன்படுத்திக் கொள்ளும்வரை அது அவர்களை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. அதாவது சுவிசேஷ

யுகத்தில் தனிநபர்கள் நியாயமாக்கும் விசுவாசத்தின் மூலம் பரீட்சார்த்த ரீதியில் பலி புண்ணியத்தை தங்களுக்கென்று பயன்படுத்திக் கொள்ளும்போது மட்டுமே தனி நபர்களாக அவர்களுடைய கணக்கில் யெஷுஆ அவருடைய பலி புண்ணியத்தை கருதப்பட்ட நிலையில் கணக்கில் எழுதினார். மேலும் பிரதிஷ்டை செய்யும் விசுவாசத்தின் மூலம் அவர்கள் உயிரூட்டப்பட்ட விதத்தில் அந்த பலி புண்ணியத்தை தங்களுக்கென்று பயன்படுத்திக் கொள்ளும்போது, யெஷுஆ அவருடைய பலி புண்ணியத்தை தனிநபர்களாக அவர்களுடைய கணக்கில் உண்மை நிகழ்வாக எழுதினார். வேறு வார்த்தைகளில் சொன்னால், பெந்தெகொஸ்தே அன்று ஒரு வகுப்பாக அவர்களுடைய கணக்கில் பலி புண்ணியம் பொதுவாக எழுதப்பட்டது. ஆனால் ஒவ்வொரு தனி நபரும் தனிப்பட்ட முறையில் விசுவாசத்தை அப்பியாசிக்கும் போது, தனிப்பட்ட முறையில் பலி புண்ணியம் அவர்களுடைய கணக்கில் எழுதப்பட்டது (ரோம. 3:22-26; 10:4, 10). இந்த வித்தியாசம் தெரிந்து கொள்ளப்படுதலில் நடக்கிற காரியத்திற்கு ஒத்ததாக இருக்கிறது: உலக தோற்றத்திற்கு முன்னே தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பு தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் (எபே. 1:4), சுவிசேஷ யுகத்தில் தனிநபர்கள் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட போது தெரிந்து கொள்ளப்பட்டிருந்தார்கள் (2தெச .2:13). அதற்குக் கூடுதலாக அவர்கள் பரீட்சார்த்த ரீதியாக நியாயமாக்கப்பட்ட பிறகோ, உயிரூட்டப்பட்ட விதத்தில் நியாயமாக்கப்பட்ட பிறகோ பாவஞ் செய்யும் போது, மன்னிப்புக்காகத் தகுந்த விதத்தில் விண்ணப்பம் செய்தால், யெஷுஆ பரீட்சார்த்த ரீதியிலோ அல்லது உயிரூட்டப்பட்ட விதத்திலோ அதற்குத் தேவையான புண்ணியத்தை கணக்கில் எழுதி, அவர்களுக்குப் பாவ மன்னிப்பை உண்டாக்கி, அவருடைய நீதியினால் அவர்களை மூடுகிறார் (1யோவா. 2:1,2).

## சுவிசேஷ யுக பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலில் பலி புண்ணியம் கணக்கில் எழுதப்பட்டதாகக் கருதப்படுவது - அதின் செயல்முறை

67. நம்முடைய கர்த்தர் பலி புண்ணியத்தை கணக்கில் எழுதப்பட்டதாகக் கருதுவதை எவ்வாறு செய்தார்? இந்த விஷயத்தை நாங்கள் இவ்வாறு புரிந்து கொள்கிறோம்: சுவிசேஷ யுகத்தில், நியாயப் பிரமாணத்தைப் போதிப்பதின் மூலம் மனந்திரும்புதலையும், சுவிசேஷத்தின் நியாயமாக்கும் அம்சங்களைப் போதிப்பதின் மூலமும் விசுவாசத்தையும் யெஷுஆவானவர், நிஜநிறைவேறுதலான லேவியர்களில் (பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்டவர்களுக்கு) உருவாக்கினார். அவர்கள் மனந்திரும்புதலின் செயல்முறையிலிருந்த போது, பாவ மன்னிப்பை ஆவலாக விரும்பத் தொடங்கி, அதற்காக அவரிடம் மன்றாடினார்கள். ஆனால் சுவிசேஷத்தின் நியாயமாக்கும் அம்சங்களைப் பற்றிய போதனையை அவர்கள் முழு மனதோடு ஏற்றுக் கொள்ளும்போது மட்டுமே, நியாயமாக்கும் விசுவாசத்தை அடைந்தார்கள். இந்த நியாயமாக்கும் விசுவாசமானது, கிறிஸ்துவின் பலி புண்ணியத்தின் நிமித்தம் தேவன் ஒரு பாவியின் பாவங்களை மன்னித்து கிறிஸ்துவின் நீதியை அவன் கணக்கில் எழுதி, அவனோடு சமாதானமாயிருக்கும் நிலைக்குள் பிரவேசிக்கிறார் என்று இருதய பூர்வமாக நம்பும்.



68. மனந்திரும்பின ஒரு பாவியின் இருதயத்தில் இவ்விதமான ஒரு விசுவாசம் உருவாக்கப்பட்டவுடனே, (1) அவனுக்காகப் பலி புண்ணியத்தை யெஷுஆ தேவ நீதியின் கணக்கில் எழுதினதாகக் கருத (உண்மை நிகழ்வாக அல்ல) அவர் பிதாவுக்குத் தெரிவிப்பார். (2) அதின் விளைவாகத் தேவன் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதாகக் கருதுகிறார் (உண்மை நிகழ்வாக அல்ல), (3) கிறிஸ்துவின் நீதி அவனுடைய கணக்கில் எழுதப்பட்டதாகக் கருதுகிறார் (உண்மை நிகழ்வாக அல்ல). மேலும் (4) அதின் காரணமாகத் தேவன் அவனோடு சமாதானமாயிருக்கும் நிலைக்குள் பிரவேசித்ததாகக் கருதுகிறார். இந்த நான்கு செயல்களும் உண்மை நிகழ்வானவைகளாக அல்லாமல், கருதப்பட்ட நிலையில் செய்யப்பட்டவைகளாக இருந்ததால், விசுவாசத்தினால் நியாயமாக்கப்பட்டவர்கள், உயிரூட்டப்பட்ட விதத்தில் அல்லாமல், பரீட்சார்த்த ரீதியில் மட்டுமே நியாயமாக்கப் படுகிறார்கள்.

69. மேலும் சுவிசேஷ யுக லேவியர்கள் முதலில் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை அனுபவித்த பிறகும், பாவஞ் செய்து, அதற்குப் பிறகு மனந்திரும்பி, அந்த பாவத்தை மூடுவதற்காகக் கிறிஸ்து அவருடைய புண்ணியத்தை தேவனுடைய நீதியின் கணக்கில் எழுதி இருக்கிறார் என்றும், தேவன் அவனுக்காக அதை ஏற்றுக் கொண்டார் என்றும், விசுவாசிக்கும்போது, (1) இவ்விதமாக மனந்திரும்பும் விசுவாசிக்காகத் தேவையான பலி புண்ணியத்தை யெஷுஆ தேவ நீதியின் கணக்கில் எழுதினதாகக் கருதுவார், (2) மேலும் அவனுக்குத் தேவையான அந்த பலி புண்ணியத்தை தேவனும் அவனுடைய கணக்கில் எழுதினதாகக் கருதுவார். இவ்வாறாகத் தேவன் அவனுடைய பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலைத் தொடர்ந்து உண்டாக்குகிறவராக இருக்கிறார். யெஷுஆ அவனுடைய பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலை தொடர்ந்து பாதுகாப்பவராக இருக்கிறார்.

## சுவிசேஷ யுக உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலில் பலி புண்ணியம் உண்மை நிகழ்வாகக் கணக்கில் எழுதப்படுவது - அதின் செயல்முறை

70. சுவிசேஷ யுகத்தில் நம்முடைய கர்த்தர் உண்மை நிகழ்வாகக் கணக்கில் எழுதப்படுவதை எவ்வாறு செய்தார், அதாவது, விசுவாசிகளின் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலிலிருந்து தனிப்பட்ட ஒன்றாக, அவர்களுடைய நியாயமாகுதலுக்கு எவ்வாறு உயிரூட்டினார்? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: நம்முடைய கர்த்தர் தேவ வார்த்தையின் மூலம், பிரதிகிரியை செய்யும் இருதயங்களில், பிரதிஷ்டை செய்யும் விசுவாசத்தையும் அன்பையும் உருவாக்குகிறார். அதன் மூலம் அவர்கள் தங்களைத் தேவனுக்கு முழுமையாகப் பிரதிஷ்டை செய்வதற்குத் திராணி அளிக்கிறார். அதற்குப் பிறகு தேவன் அவர்களுடைய பிரதிஷ்டையை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாயிருக்கும்போது, நம்முடைய கர்த்தர் பிதாவின் சமுகத்தில் பிரத்தியட்சமாகி (எபி. 9:24), அவர்களுக்காகத் தம்முடைய பலி புண்ணியத்தை உண்மை நிகழ்வாகப் பிதாவின் (தேவ நீதியின்) கணக்கில் எழுதுகிறார்.

71. பரீட்சர்த்த ரீதியில் பலி புண்ணியத்தை கணக்கில் எழுதுவது சம்பந்தமாக, பிதாவுக்கும் கர்த்தராகிய யெஷுஆவுக்கும் இடையிலுள்ள ஒரு ஒப்பந்தத்திற்கு இணக்கமாக, பிரதிஷ்டை செய்த அந்த விசுவாசியை பூரண நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அளவிற்கு அவருடைய பலி புண்ணியத்தை அந்த விசுவாசிக்காக விடுவித்து, தேவனுக்கு முன்பாக உண்மை நிகழ்வாகத் தேவ நீதியின் கணக்கில் அதை எழுதுகிறார். அதினால் பிதாவாகிய தேவன், அவருடைய திட்டத்திற்கு இணக்கமாக, பிரதிஷ்டை செய்த அந்த விசுவாசியை உண்மை நிகழ்வாக மன்னிக்கவும், கிறிஸ்துவின் நீதியை உண்மை நிகழ்வாக அவனுடைய கணக்கில் எழுதவும், அவனோடு சமாதானமான நிலைக்குள் உண்மை நிகழ்வாகப் பிரவேசிக்கவும் கூடியவராக இருக்கிறார். இது அந்த விசுவாசியை ஆதாமினால் வந்த தண்டனையிலிருந்தும், ஆதாமினால் வந்த பெலவீனத்தினால் அவன் செய்த உண்மை நிகழ்வான பாவங்களின் தண்டனையிலிருந்தும், அவனை நித்தியத்திற்கும் உண்மை நிகழ்வாக விடுவிக்கிறது. மேலும் அவனை நீதியில் பூரணனாக உண்மை நிகழ்வாக எண்ணுகிறது (எபி 10:14). அது முதல் அவன் ஆதாமுக்குள் மரிப்பது கூடாத காரியம். அதாவது அவன் இனி ஆதாமினால் வந்த மரணத்தினால் மரிப்பது அசாத்தியமானதாகும்.

72. மேலும் அதற்குப் பிறகு அவன் அறியாமையினாலோ பெலவீனத்தினாலோ செய்கிற பாவங்கள் என்னவாக இருந்தாலும், அதன் சம்பந்தமாக அவன் மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும் அப்பியாசிக்கும் போது, அந்த பாவங்கள் மன்னிக்கப்பட்டு நீதியினால் மூடப்படும். ஏனென்றால் அப்பொழுது அவர்களுடைய அருமையான பரிந்து பேசுபவர் (1யோவா 2:1,2) அவர்களை மன்னிப்பதற்காகவும், நீதியில் பூரணப்படுவதற்காகவும் தேவையான அவருடைய புண்ணியத்தை அவர்களுக்காகப் பிதாவுக்கு முன்பாக உண்மை நிகழ்வாகத் தேவனுடைய நீதியின் கணக்கில் எழுதுவார். அதின் விளைவாகத் தேவன் அதை உண்மை நிகழ்வாக அவர்களுடைய கணக்கில் எழுதுவார். அதன் மூலம் அந்த பாவங்கள் சம்பந்தமாக அவன் மன்னிக்கப்பட்டு, கருதப்பட்ட நிலையில் மனுஷீக பூரணத்துவத்தின் நிலைக்குக் திரும்பக் கொண்டு வரப்பட்டு, தேவனோடு சமாதானத்தைப் பெறுகிறான். அவர்களுக்காகக் கர்த்தர் செய்திருக்கிற இந்த கிருபையான ஏற்பாடு இல்லாதிருந்தால், அவர்கள் மீட்டு கொள்ளப்படக் கூடாத அளவிற்கு விழுந்திருப்பார்கள். ஆனால் இந்த கிருபையான ஏற்பாட்டினாலும் தெய்வீக தயவினாலும் அவர்கள் பரம அழைப்பில் நிலைத்து நின்று ஜெயங் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். இவ்வித ஒரு இரட்சகருக்காக யாவே தேவனைப் போற்றி துதிப்போமாக!

## மில்லினிய யுக நியாயமாகுதல் – அதின் செயல்முறை

73. இப்பொழுது நாம் மில்லினிய யுகத்தில் இருக்க போகிற நியாயமாகுதலுக்குரிய நிபந்தனைகளைப் பார்ப்போம். மில்லினிய யுகத்தில் பரீட்சார்த்த ரீதியில் நியாயமாகுதலோ, உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலோ இருக்காது. ஏனென்றால் இந்த இரு வகையான நியாயமாகுதல்கள், மீட்கும் பலி புண்ணியம் உபயோகப்படுவதினால் (application) அல்லாமல், மீட்கும் பலி புண்ணியம் கணக்கில் எழுதப்படுவதின் (imputation) அடிப்படையில் செயல்படுகின்றன. மில்லினிய யுகத்தில் மீட்கும் பலி புண்ணியம் கணக்கில் எழுதப்படாது. மாறாக மீட்கும் பலி புண்ணியம் உபயோகிக்கப்படும். தெரிந்து கொள்ளப்படாதவர்களிடமிருந்து எந்த காரியமும் கோரப்படாமல், மீட்கும் பலி புண்ணியம் அவர்களுக்காக உபயோகிக்கப்படுவதினால் மட்டுமே, அது அவர்களுடைய பாவ மன்னிப்பை விளைவித்து, ஆதாமினால் அவர்களுக்கு வந்த தண்டனையை ரத்து செய்யும். மரண நிலையிலுள்ள தெரிந்து கொள்ளப்படாதவர்களின் காரியத்திலிருந்து இது தெளிவாக இருக்கிறது: அவர்கள் உணர்வற்றவர்களாக இருப்பதால் அவர்கள் எதையும் அறிய முடியாது, எதையும் செய்ய முடியாது. இருந்தாலும் அவர்கள் மரண நிலையிலிருந்து விழித்தெழுப்பப்படுவார்கள். அது ஆதாமினால் வந்த தண்டனை ரத்துசெய்யப்படுதலை அர்த்தப்படுத்தும். மேலும் அந்த தண்டனை ரத்து செய்யப்படுவது அவர்களுடைய பாவங்களின் மன்னிப்பை அர்த்தப்படுத்தும்.

74. சுவிசேஷ யுக நியாயமாகுதலில், அதின் இரு வகைகளும் உடனடியாக நடை பெற்றவைகளாக இருந்ததைப் போல் அல்லாமல், மில்லினிய யுக நியாயமாகுதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முழு மில்லினி யுகமும் தேவைப்படும். ஏனென்றால் சுவிசேஷ யுகத்தின் நியாயமாகுதல், கருதப்பட்ட நிலையில் செய்யப்பட்ட (reckoned) ஒன்றாக இருந்ததைப் போல் அல்லாமல், மில்லினிய யுக நியாயமாகுதல் உண்மை நிகழ்வாகச் (actual) செய்யப்படும் ஒன்றாக இருக்கும். மேலும் அதை அளிப்பதற்குத் தேவையான நிபந்தனைகளாவன: பூரணத்துவத்தை அடையும் வரை, விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் அப்பியாசிப்பதென்பதாகும். மில்லினிய யுக போதனைகள் மற்றும் ஏற்பாடுகள் சம்பந்தமாக, மன மதிப்பீடு மற்றும் இருதய சார்பு என்ற கருத்தில், அவர்கள் விசுவாசிக்க வேண்டும். இவ்வித விசுவாசமில்லாமல், அவர்கள் மில்லினி யுக போதனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் இசைவிற்குள் வர முடியாது. ஏனென்றால் தேவன் எந்த யுகத்திலும், ஒரு போதும், அவிசுவாசிகளை இரட்சிக்கவோ அவர்களுடன் செயல்படவோ மாட்டார். ஆனால் மில்லினிய யுக விசுவாசமானது, இப்பொழுது அப்பியாசிக்க வேண்டியதைப் போல், தரிசிக்காமல்

அப்பியாசிக்க வேண்டிய விசுவாசமாக இருக்காது. மாறாக எல்லோரையும் நம்பச் செய்யும், மறுத்துக்கூற முடியாத நிரூபணமுடைய விசுவாசமாக இருக்கும். ஏனென்றால் சாபத்தின் விளைவுகள் எல்லாம் நீக்கப் பட்டு, அவைகளுக்கு எதிரிடையான ஆசீர்வாதங்கள் எங்கும் நிலவும் போது, நிச்சயமாக எல்லோரும் தரிசித்து விசுவாசிப்பார்கள். ஆனால் நியாயமாகுதலை முழுமை யாக அடைவதற்கு அவர்கள் மில்லினிய யுக போதனை களுக்கும் ஏற்பாடுகளுக்கும் முற்றிலும் கீழ்ப்படிய வேண்டியதாக இருக்கும். ஏனென்றால் யெஷுஆ மற்றும் சபை, அவர்களுக்கு யெஷுஆவின் ஜீவ உரிமையையும், ஜீவாதார உரிமைகளையும், படிப்படியாக அளிப்பதின் மூலம், அவர்களுக்குச் சாபத்தின் குணமாக்குதலையும் இழந்ததைத் திரும்பப் பெறுதலையும் அளிப்பார்கள்.

*75.* அவர் அவைகளை அவர்களுக்கு உடனடி யாகக் கொடுக்காமல், அவர்கள் அவருடைய போதனை களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கீழ்ப்படியும்போது படிப்படி யாக அளிப்பார். மேலும் அவன் படிப்படியாக அந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது, அதற்குரிய குண மாகுதலையும் ஆரோக்கியத்தையும் அவன் படிப்படி யாகப் பெற்றுக் கொள்வான். சாபத்தின் எல்லா விளைவு களுடனும், இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் எல்லா அம்சங்களுடனும், அவ்வாறு நடைபெறும். குணமாகு தலின் மற்றும் ஆரோக்கியத்தின் ஒவ்வொரு அம்சத் தையும் பெற்றுக் கொள்வதற்கு தெரிந்து கொள்ளப் படாதவர்களிடமிருந்து குறிப்பிடப்பட்ட அளவான விசுவாசமும் குறிப்பிடப்பட்ட வகையான கிரியைகளும் கோரப்படும். அதற்குரிய விசுவாசத்தின் மற்றும் கிரியை களின் அளவுக்குத் தக்கவாறு குணமாகுதலும் ஆரோக் கியமும் அளிக்கப்படும். சாபத்தின் மற்றும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் ஒவ்வொரு அம்சம் சம்பந்தமாக இந்த போதனைகளும் ஏற்பாடுகளும் உதவிகளும் இருக் கும். மேலும் சாபத்தின் இந்த அம்சங்கள் ஒவ்வொன் றையும் குணமாக்குவதற்கும் இழந்ததைத் திரும்பக் கொடுப்பதற்கும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் கோரப் படும். மேலும் அவைகள் அப்பியாசிக்கப்படும்போது மட்டுமே அவைகளுக்கேற்ற குணமாகுதலும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலும் அளிக்கப்படும்.

*76.* இவ்வாறாக இந்த செயல்முறை மில்லினிய யுகம் முழுவதும் நடைபெறும். மேலும் மில்லினிய யுகத் தின் முடிவில் வெளிப்படையான விசுவாசம் மற்றும் கீழ்ப் படிதல் உட்பட விசுவாசத்தின் மற்றும் கீழ்ப்படிதலின் எல்லா அம்சங்களிலும் அவைகள் அப்பியாசிக்கப்படும் போது, சாபத்தின் எல்லா விளைவுகளும் அழிக்கப்பட்டு, சரீர, மன, கலை. ஒழுக்க மற்றும் மத ரீதியான திறமை களில் பூரணத்துவம் முழுமையாக நிறைவேற்றப்படும். ஏனென்றால் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல், மீட்கும் பலி புண்ணியத்தை அதாவது ஜீவ உரிமை மற்றும் ஜீவாதார உரிமைகளையும் படிப்படியாகத் தனதாக்கிக் கொள்ளும் போது, குணமாகுதலும் இழந்ததைத் திரும்பக் கொடுத்தலும் படிப்படியாக நடைபெறும். மேலும் மில்லினிய யுக முடிவிற்குள், விசுவாசமும் கீழ்ப்படிதலும் அவைகளை முழுமையாகத் தனதாக்கி கொண்டிருக்கும். அதின் விளைவாக அவர்கள் மில்லினிய யுகத்தின் முடி வில் கிரியைகளினால் முழுமையாக நியாயமாக்கப் பட்டிருப்பார்கள்.

*77.* ஒரே வார்த்தையில் சொன்னால், சுவிசேஷ யுகத்தில் விசுவாசம் நியாயமாகுதலை உண்டாக்கும் கருவியாகவும், நியாயமாகுதலின் நிபந்தனையாகவும் இருக்கையில், மில்லினிய யுகத்தில் கீழ்ப்படிதல் நியாய மாகுதலை உண்டாக்கும் கருவியாகவும், நியாயமாகு தலின் நிபந்தனையாகவும் இருக்கும். இந்த யுகங்களின் நோக்கங்களே அதற்குக் காரணங்களாகும்.

## நியாயமாகுதல் ஆசரிப்புக் கூடாரத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது - *PT 1946, p.125*

*78.* நாம் அறிந்திருக்கிறதைப் போல் ஒப்புர வாகுதலின் கண்ணோட்டத்திலிருந்து செயல்படுகிற தேவனுடைய திட்டத்தின் ஒவ்வொரு முக்கியமான அம்சமும் ஆசரிப்புக் கூடாரம் சம்பந்தப்பட்ட விதத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் பரீட் சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் என்பவைகளையும் அடையாளப்படுத்த கர்த்தர் கவன மாயிருந்தார். "கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப் போடப்பட்ட" ஆட்டுமயிரினால் ஆன மூடுதிரையின் மூலம் இவைகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. *(யாத். 26:7-9)*. பிராகாரத்திலுள்ளவர்களால் காணப்படக்கூடிய அந்த மூடுதிரையின் பகுதி பரீட்சார்த்த ரீதியான நியாய மாகுதலையும், பரிசுத்தத்திலுள்ளவர்களால் காணப்படக் கூடிய அந்த மூடுதிரையின் பகுதி உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலையும் அடையாளப்படுத்துகின்றன.

*79.* பின்வரும் கருத்துக்கள் இதைத் தெளிவாக் கும்: பாளயத்திலுள்ளவர்களுக்கு தெளிவாகக் காணப் படுகிற தகசுத்தோல் மூடுதிரையானது, உலகத்தாருக்குக் காணப்படும் விதத்தில் கிறிஸ்து வகுப்பாரை அடையா ளப்படுத்துகிறது. அதாவது உலகத்தாருக்கு கிறிஸ்து வகுப்பார் அழகற்றவர்களாகவும் அருவருப்பானவர் களாகவும் தோன்றுவார்கள். சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோலினாலான மூடுதிரை முதலாம் (தகசுத்தோல்) மூடு திரையின்கீழ் மறைந்திருக்கும். அது கர்த்தராகிய யெஷுஆவின் மனுஷீகத்தின் புண்ணியத்தை அடை யாளப்படுத்தும். ஆட்டு மயிராலான பத்து மூடுதிரைகள் சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோலினாலான திரையினால் மூடப்பட்டிருக்கும். அவைகள் கிறிஸ்துவின் பலி புண்ணியத்தினால் மூடப்பட்டிருக்கிற சபையின் நியாய மாக்கப்பட்ட மனுஷீகத்தை அடையாளப்படுத்துகின்றன. மூடப்படாத பதினோராம் மூடுதிரை கூடாரத்தின் முகப் பிற்கு முன்னே மடித்துப் போடப்பட்டிருக்கும். அது சபையின் நியாயமாக்கப்பட்ட மனுஷீகத்தை அல்லாமல் விசுவாசத்தினால் நியாயமாகுதலை அடையாளப் படுத்தும். பிராகாரத்திலுள்ளவர்களால் காணப்படக் கூடிய அதின் பகுதி பரீட்சார்த்த ரீதியான நியாய மாகுதலையும், பரிசுத்தத்திலுள்ளவர்களால் காணப்படக் கூடிய பகுதி உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலையும் அடையாளப்படுத்துகின்றன. மெல்லிய பஞ்சு நூலாலான மூடுதிரைகள் புது சிருஷ்டிகளாகக் கிறிஸ்து வகுப்பாரை அடையாளப்படுத்துகின்றன. புது சிருஷ்டிகளாக அவர் களில் எவ்வித பாவமும் இல்லை *(1 பேது. 2: 22; ரோம. 8: 1-4; 1 யோவா. 3: 6, 9)*.

*80.* ஆசரிப்புக்கூடார காட்சியை உபயோகித்து நாம் பரீட்சார்த்த ரீதியான மற்றும் உயிரூட்டப்பட்ட நியாயமாகுதல் சம்பந்தமான படிகளைச் சுருக்கமாகக் கருத்தில் கொள்வோம்: பாவியாயிருக்கிற ஒருவன் மனந் திரும்புதலின் மூலம் நிஜ நிறைவேறுதலான பாளயத்தை (உலகத்தை) விட்டு, கிறிஸ்துவினிடத்தில் (நிஜ நிறை வேறுதலான பிராகார வாசல்) விசுவாசத்தின் மூலம் நிஜ நிறைவேறுதலான பிராகாரத்திற்குள் (பரீட்சார்த்த ரீதி யான நியாயமாகுதலின் நிலை) பிரவேசிக்கும் போது


அதிகமதிகமாகத் தேவனோடு சமாதானத்தை அடைவான். பரீட்சார்த்த ரீதியில் நியாயமாக்கப்பட்ட இந்த நிலையில் (நிஜ நிறைவேறுதலான பிராகாரம்) அவன் கர்த்தருடைய பலியை (நிஜ நிறைவேறுதலான பலிபீடம்) நோக்கிப் பார்த்து, தேவ வார்த்தையைக் கொண்டு (நிஜ நிறைவேறுதலான தண்ணீர் தொட்டி) மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள அசுசியைக் கழுவி கொள்வான். அதற்குப் பிறகு அவன் பிரதிஷ்டை மற்றும் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட நிலையை நோக்கி( நிஜ நிறைவேறுதலான பரிசுத்தம்) அதின் வாசல் திரையைச் சென்றடையும்வரை (மனுஷீக சித்தத்தின் மரணம்) படிப்படியாக முன்னேறுவான்.

*81.* அதற்கு அடுத்த படி பிரதிஷ்டை என்பதாகும். அதன்மூலம் அவனுடைய மனுஷீகம் (வருங்காலத்தில் நிஜ நிறைவேறுதலான கர்த்தருடைய ஆட்டின் ஒரு பாகமாக இருக்கப் போகிற மனுஷீகம்) மரித்த நிலையிலுள்ள மனுஷீக சித்தத்தோடு (நிஜ நிறைவேறுதலான பரிசுத்தத்தின் வாசல் திரை)கட்டப்படும். அப்பொழுது யெஷுஆ அவருடைய பலி புண்ணியத்தை அவனுக்காக அவனுடைய கணக்கில் உண்மை நிகழ்வாக எழுதுவார். இதின் மூலம் அவன்மேலுள்ள ஆதாமின் தண்டனையைத் தேவன் ரத்து செய்வதினால் அவனுடைய நியாயமாகுதலுக்கு உயிரூட்டப்படுகிறது. அதற்குப் பிறகு, இப்பொழுது தேவனுடைய பார்வையில் பூரணமாக இருக்கிற அவனுடைய மனுஷீகத்தை யெஷுஆ தேவனுக்கு ஒரு காணிக்கையாகச் செலுத்துவார். அப்பொழுது தேவன் பரிசுத்த ஆவியை அளிப்பதின் மூலம் அந்த காணிக்கையை ஏற்றுக் கொண்டு, அந்த காணிக்கையைப் பாவ நிவாரண பலியின் ஒரு பாகமாக மாற்றுவார் (நிஜ நிறைவேறுதலான கர்த்தருடைய ஆடு). இப்பொழுது அந்த நபர், ஒரு புது சிருஷ்டியாக, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட நிலையிலுள்ள (நிஜ நிறைவேறுதலான பரிசுத்தம்) ஒரு ஆசாரியனாகவும், உயிரூட்டப்பட்ட நியாயமாகுதலைப் பெற்ற ஒரு மனுஷனாக, நிஜ நிறைவேறுதலான பலி பீடத்தின் மேலுள்ள கர்த்தருடைய ஆட்டின் ஒரு பாகமாகவும் இருக்கிறான்.

### ஆரோன் தனக்காகச் செலுத்தின பலிகள் – *PT #479, Sept-Oct 1965, p.74*

*82.* லேவி. *9:7*-ம் வசனமானது பலி செய்யப்பட்ட காளையின் ரத்தம் இஸ்ரயேலில் அனைவருக்காகவும், அதாவது ஆசாரியர்கள், லேவியர்கள் மற்றும் இஸ்ரயேலர்களுக்காகவும் ஒப்புரவாகுதல் செய்தது என்று நமக்குக் காண்பிக்கிறது. இருந்தாலும் பலி செய்யப்பட்ட வெள்ளாட்டுக் கடாவின் ரத்தத்திற்கும் இந்த ஊழியத்தோடு தொடர்பு இருந்தது. ஏனென்றால் சபை வகுப்பாரின் மனுஷீகத்தின் பலியின் மூலமாகத்தான், யெஷுஆவின் பலி புண்ணியம் உலகத்தைக் கிரயத்திற்குக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும்படி விடுவிக்கப்படுகிறது.

*83.* நிஜ நிறைவேறுதலான காளையின் பலி புண்ணியம் தான், நிஜ நிறைவேறுதலான வெள்ளாட்டுக் கடாவின் பலி புண்ணியமாக இருக்கிறது. யெஷுஆ சபைக்காகவும் உலகத்திற்காகவும் தேவநீதியை திருப்தி செய்கிறவராக இருக்கிறார். பாவ நிவாரண பலியில் சபை பங்குக்கொள்வதின் மூலம் விடுவிக்கப்படுகிற யெஷுஆவின் பலி புண்ணியமானது, உலகத்தாரைக் கிரயத்திற்குக் கொள்ளும் (1யோவா. *2:2; TS p.79*). கர்த்தராகிய யெஷுஆ கருதப்பட்ட நிலையில் சபை வகுப்பாரின் மனுஷீகத்தின் பிதாவாக, ஜீவனை அளிப்பவராக இருக்கிறார் (யோவா. *6:27;1* யோவா. *5:12*). உலகத்தாருக்கு உண்மை நிகழ்வான பிதாவாக இருப்பார் (ஏசா. *9:6*), நித்திய ஜீவனை அளிப்பவரான இரண்டாம் ஆதாமாக இருப்பார் (1கொரி. *15:45-48*).



*84.* லேவி. *9:9*-ம் வசனமானது, காளை பலி செய்யப்பட்ட பிறகு, அதின் ரத்தத்தை (இது யெஷுஆவின் பலி புண்ணியத்தை அர்த்தப்படுத்துகிறது) ஆரோனின் குமாரர்கள் கைகளில் பிடித்து, ஆரோன் அதைப் பலி பீடத்தின் மேல் தெளிப்பதற்குச் சற்று முன் அவரிடம் கொடுத்தார்கள் என்று காண்பிக்கிறது. ஆகையால் ஆரோனின் குமாரர்களின் இந்த செயல்கள் கீழ்ப்பட்ட ஆசாரியர்களாக இருக்கப் போகிறவர்களின் (அவர்கள் அப்பொழுது இன்னும் ஆசாரிய பணியில் ஸ்தாபிக்கப்படாதிருந்தார்கள்) நியாயமாகுதலுக்கு, உயிரூட்டப்படுவதற்கு முன், அவர்கள் செய்த காரியங்களை அடையாளப்படுத்த வேண்டும். கீழ்நிலை ஆசாரியர்களாக இருக்கப் போகிறவர்களின் பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலில் (1கொரி. *1:31*) யெஷுஆவின் பலி புண்ணியம் அல்லது நீதி மற்றும் அதில் அர்த்தப்படுத்தப்பட்ட காரியங்கள் (அவருடைய பூரண மனுஷீகம், ஜீவன், அதின் ஜீவ உரிமை மற்றும் ஜீவாதார உரிமைகள்) பரீட்சார்த்த ரீதியில் அவர்களுடைய கணக்கில் எழுதப்பட்டிருந்தன. அதாவது அவர்கள் பரீட்சார்த்த ரீதியில் அதைத் தங்களுடையதாகப் பற்றிக் கொண்டிருந்தார்கள். வருங்காலத்தில் கீழ்ப்பட்ட ஆசாரியர்களாக இருக்கப் போகிறவர்களாக இருந்த, ஆரோனின் குமாரர்கள் ரத்தத்தைக் கைகளில் பிடித்திருப்பதின் மூலம், இது அடையாளப்படுத்தப்படுகிறது.


*85.* அவர்கள் பிரதிஷ்டை செய்தபோது, அவர்களுக்காக யெஷுஆவின் பலி புண்ணியத்தின் மூலம் தேவ நீதி திருப்தி செய்யப்பட்டு, அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவதற்குச் சற்றுமுன், அவர்கள் பரீட்சார்த்த ரீதியாகப் பற்றிக் கொண்டிருந்த இந்த பரீட்சார்த்த ரீதியான நீதியை பிரதிஷ்டையில் பிரதான ஆசாரியராகிய யெஷுஆவிடம் கொடுத்தார்கள். ஆரோனின் குமாரர்கள் அந்த ரத்தத்தை ஆரோனிடம் கொடுப்பதின் மூலம் இது அடையாளப்படுத்தப்படுகிறது. அவர்கள் பிரதிஷ்டை செய்யாதிருந்தால் யெஷுஆ அவர்களுடைய நியாயமாகுதலுக்கு உயிரூட்டி இருக்கமாட்டார். அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

*86.* ஆரோனின் குமாரர்கள் காளையின் ரத்தத்தை ஆரோனிடம் கொடுத்த பிறகு, அவர் அந்த ரத்தத்தைத் தாமிர பலி பீடத்தின் மேல் தெளித்தார் (லேவி. *9:9*). தாமிர பலி பீடமென்பது, கர்த்தராகிய யெஷுஆ மற்றும் சபையின் மனுஷீகத்தை அடையாளப்படுத்துகிறது. ஆனால் இங்கே, நிஜ நிறைவேறுதலான தெளிக்கப்படுதல் சபை வகுப்பாரின் மனுஷீகத்திற்காக மட்டுமே செய்யப்பட்டது. ஏனென்றால் யெஷுஆவை தேவனுக்கு முன்பாகக் கருதப்பட்ட நிலையில் பூரணமாக்குவதற்கு, எவ்வித பலி

புண்ணியமும் கணக்கில் எழுதப்படுவது தேவையற்றதாக இருந்தது. ஆரோன் பலிபீடத்தின் மேல் ரத்தத்தைத் தெளிப்பதென்பது, சபை வகுப்பாரின் நியாயமாகு தலுக்கு உயிரூட்டுவதற்கு, பிரதான ஆசாரியராகிய நம் முடைய கர்த்தர், அவருக்குரிய பங்கை நிறைவேற்றுவதை அடையாளப்படுத்துகிறது. அவர்களுடைய நியாயமாகு தலுக்கு உயிரூட்டுவது என்பது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: அவர்களை தேவனுடைய பார்வையில் பூரணர்களாகவும், தேவனுக்கு பிரியமானவர்களாகவும் ஆக்குவதற்கு தேவைப்படுமளவிற்கு அவருடைய பலி புண்ணியத்தை அவர்களுடைய கணக்கில் எழுதுகிறார். இவ்வாறாக சபை வகுப்பாருக்காக செய்யப்படும் ஒப்புர வாகுதலின் முதல் பகுதியைச் செய்து முடிப்பார். இந்த முதல் பகுதியில் இரு படிகள் இருக்கின்றன: *(a)* நிஜ நிறைவேறுதலான கிருபாசனத்தை மூடுகிற ரத்தத்தின் மூலம் சபை வகுப்பாரின் பாவங்களின் மேலுள்ள தேவ கோபத்தை நீக்குவார், *(b)* நிஜ நிறைவேறுதலான பலி பீடத்தின் மேல் தெளிக்கப்பட்ட ரத்தத்தின் மூலம், அவர்களை நீதியுள்ளவர்களாக்கி (அவர்களுடைய கணக் கில் எழுதப்பட்ட யெஷுஆவின் பலி புண்ணியத்தின் மூலம்), தேவனுக்குப் பிரியமானவர்களாக ஆக்குவார்.

*87.* இந்த இரு காரியங்கள் கீழ் நிலை ஆசாரியர்கள் தேவனோடு ஒப்புரவாக்குவதின் முதல் பகுதியை நிறைவேற்றும், அதாவது அவர்களை தேவ னுக்குப் பிரியமானவர்களாக்கும். ஆனால் பலி செய்யப் பட்ட வெள்ளாட்டுக் கடாவின் ரத்தம் பலி பீடத்தின் மேல் தெளிக்கப்படுவதென்பது (லேவி. *16:18*), அவர்களுடைய ஒப்புரவாகுதலின் இரண்டாம் பகுதியை நிறைவேற்றும். அதாவது தேவனை அவர்களுக்குப் பிரியமானவராக ஆக்கும். அவர்களுடைய பலியின் பாடுகளின் மூலம் (நிஜ நிறைவேறுதலான ஆட்டுக்கடாவின் ரத்தம்) அவர்களு டைய குணாம்சங்களைப் பூரணப்படுத்துவதின் மூலம் இது செய்யப்பட்டது (தியாக அன்பில் வளர்ந்து தேவ அன்பைப் புரிந்துகொள்வதின் மூலம் இது நடைபெறும்).

*88.* லேவி. *9:12-14* வசனங்கள் ஆரோனின் சர்வாங்க தகன பலியைக் குறித்து சொல்கின்றன. நாம் இதுவரை பார்த்ததைப் போல அவருடைய பாவ நிவாரண பலியானது, யெஷுஆவின் பலியின் "பாவத்திற் காக ஒப்புரவாகுதல் செய்யும்" அம்சத்தை அடையாளப் படுத்துகிறது. ஆனால் அவருடைய சர்வாங்க தகன பலி என்பது, யெஷுஆவின் பலியைத் தேவன் ஏற்றுக் கொண்டதை சுவிசேஷ யுகத்தில் வெளிப்படுத்துவதை அர்த்தப்படுத்துகிறது. கீழ்நிலை ஆசாரியர்களாக இருக்கப் போகிறவர்கள், பரீட்சார்த்த ரீதியான நியாயமாகுதலில், யெஷுஆவின் பலி புண்ணியத்தை பரீட்சார்த்த ரீதியில் பற்றிக் கொள்ளும்போதும், பிரதிஷ்டையில் அதை பிரதான ஆசாரியராகிய யெஷுஆவிடம் கொடுக்கும் போதும், தேவன் அவருடைய பலியை ஏற்றுக் கொண்டதை தேவன் வெளிப்படுத்தினதை அவர்கள் அங்கீகரிப்பதை அடையாளப்படுத்துகிறது (லேவி. *9:12*). அது போலவே பிரதான ஆசாரியராகிய நம்முடைய கர்த்தர், பலி பீடத்தின் மேல் ரத்தத்தை நிஜ நிறை வேறுதலாக தெளிப்பதின் மூலம் அதையே அங்கீகரித் தார். யெஷுஆவின் பலி புண்ணியத்தின் மூலம் கீழ்நிலை ஆசாரியர்கள் தேவனுக்கு பிரியமாயிருப்பதை வெளிப் படுத்தப்பட்டவர்களாக அவர்கள் தங்களை யெஷுஆ வின் சரீர அங்கத்தினர்களாக ஒப்புக் கொடுத்தார்கள் (லேவி. *9:13; Tabernacle Shadows p. 45*). யெஷு ஆ அந்த சரீரத்தின் தலையாயிருக்கிறார். பிரதான ஆசாரியராகிய யெஷுஆ, தலையாகிய தம்மையும், தம்மோடு இணைக்கப்



பட்ட சரீர அங்கத்தினர்களையும், ஒரே பலியின் பகுதி களாகச் செலுத்தினார். ஒரே பலியாக அது, முழு மனுகுலத்தின் பாவங்களுக்கு ஒப்புரவாகுதல் செய்வ தாக, யாவே தேவனுக்குப் பிரியமாக இருந்ததென்று, பிராகாரத்திலுள்ள விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தப் பட்டது (அவன் அவைகளைப் பலி பீடத்தின்மேல் தகனித்து).

## முடிவுரை

*89.* முழு மனுகுலமும் ஆதாம் பட்ட கடனில் பங்குகொள்கிறது. ஒவ்வொருவனுக்கும் எல்லோருக்கும் எதிராக முழு கடனும் இருக்கிறது. ஆகையால் ஒரு வனைக் கிரயத்திற்குக் கொள்வதற்கு எவ்வளவு பலி புண்ணியம் தேவைப்படுகிறதோ எல்லாரையும் கிரயத் திற்குக் கொள்வதற்கு அதே அளவான பலி புண்ணியம் தேவைப்படும். இவ்வாறு கடனுக்குட்பட்ட மனுகுலத் தில் இரு வகுப்புகள் இருப்பதைத் தேவன் காண்கிறார்: *(1)* விசுவாச வகுப்பார் - இவர்கள் பல்வேறு நிலை களிலுள்ள ஆவிக்குரிய தன்மைகளை அடைய தகுதிப் படுத்தும் குணாம்சத்தை அபிவிருத்தி செய்து கொள்ளக் கூடிய திராணியுள்ளவர்களாயிருக்கிறார்கள்; *(2)* அவிசுவாச வகுப்பார் - இவர்கள் பூரண மனுஷீக தன்மை க்கு மேலாக அபிவிருத்தியடைய திராணியற்றவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாரும் அவர்களால் அடையக் கூடிய உச்சநிலையை அடைய அவர்களுக்கு உதவ வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

*90.* ஆகையால் விசுவாச வகுப்பாருடன், விசுவா சத்தை கட்டாயமாகக் கோரும் சூழ்நிலைகளின்கீழ் செயல்படத் தீர்மானித்தார். அவர்களால் அந்த சூழ்நிலை களைச் சகிக்கக் கூடும். அவ்வாறு சகிக்கும் போது அவர்கள் பல்வேறு ஆவிக்குரிய தன்மைகளை அடைய தகுதிப்படுத்தப்படுவார்கள். ஆனால் இந்த சூழ்நிலைகள், மற்றவர்கள் சகிக்க முடியாத அளவிற்குக் கடினமான வைகளாக இருக்கின்றன. ஏனென்றால் அவர்கள் விசுவாசமில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் விசுவாசத்தைக் கட்டாயமாகக் கோராத எளிதான சூழ்நிலைகளின்கீழ் பரீட்சிக்க தேவன் தீர்மானிக்கிறார். ஏனென்றால் அவ்வித சூழ்நிலைகளில் மட்டுமே அவர் கள் வெற்றியடையக் கூடும்.

*91.* ஆனால் எல்லோருக்கும் எதிராக ஒரே அள வான கடன் இருக்கிறது. அவர்களுக்கு உபயோகிக்கப் படும்படி அந்த கடனுக்குச் சமமான முழு கிரயம்

நம்முடைய கர்த்தரிடம் இருக்கிறது. ஆனால் இந்த இரு வகுப்பார்களை இரு வெவ்வேறான யுகங்களின் ஏற்பாடு களின்கீழ் பரீட்சிக்க வேண்டியதாயிருக்கிறது. மேலும் முதலாம் யுகத்தின் செயல்முறையில் ஒருவனையோ அல்லது எல்லாரையோ விடுவிப்பதற்குக் கிறிஸ்துவின் பலி புண்ணியம் முழுவதும் தேவைப்படும். ஆகையால் இரண்டாம் யுகத்திற்குப் பலி புண்ணியம் உபயோகிக் கப்படக் கூடியதாக ஆக்கப்படுவதற்கு ஏதேனுமொரு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இல்லாவிட்டால் இரண்டாம் யுகத்திலுள்ளவர்கள் பட்ட அதே கடனி லிருந்து அவர்களை விடுவிப்பதற்கு எவ்வித ஈடுகிரயமும் இருக்காது.

*92.* இந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறு, கிறிஸ்து சபை வகுப்பாரை உண்மை நிகழ்வாக அல்லாமல், கருதப்பட்ட நிலையில் கிரயத்திற்குக் கொள்ளும்படி தேவன் ஏற்பாடு செய்தார். அதை அவர் இவ்வாறு செய் தார்: *(1)* கிறிஸ்துவானவர் மீட்கும் கிரயத்தைத் தேவ னுடைய கைகளில் ஒப்புவித்தார் *(லூக். 23:46), (2)* தேவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த கிரயத்தைக் கடனாகச் சபை வகுப்பாரின் கணக்கில் எழுதுவதின் மூலம், சபை வகுப்பாரை மட்டுமே *(கருதப்பட்ட நிலை யில்)* கிரயத்திற்குக் கொள்வதற்கு *(வெளி. 5: 9; 14: 3, 4)*, தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமானார்.

*93.* கிறிஸ்து தேவனிடத்தில் ஒப்புவித்திருந்த அந்த மீட்கும் கிரயத்தைச் சபை வகுப்பாருக்குக் கடனாக கொடுப்பது, தேவ நீதியை மீறாத ஒன்றாக இருப்பதால், தேவன் அதை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. பின் வரும் மூன்று காரணங்களினால் அது தேவ நீதியை மீறவில்லை: *1)* தேவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட கிரயம் முழு கடனுக்கும் ஈடானதாக இருந்தது; *2)* அந்த கிரயத்தை முழுமையாகத் தேவனுடைய கரத்திலேயே விட்டுவிட்டது; *3)* தேவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த மீட்கும் கிரயத்தைக் கிறிஸ்து எந்த நபர்களுக்குக் கடனாகக் கொடுத்தாரோ, அந்த நபர்களை மனுஷர் களாக நித்தியத்திற்கும் மரிக்கும்படி செய்ய கிறிஸ்து தேவனுக்கு வாக்குக் கொடுத்திருந்தார் - சிறு மந்தை வகுப்பார் பலியின் மரணத்தையும், திரள் கூட்டத்தார் ஊழியத்தினால் வரும் மரணத்தையும், மற்றவர்கள் இரண்டாம் மரணத்தையும் அனுபவிப்பார்கள்.

*94.* இந்த மூன்று காரியங்களினால், தேவனிடத் தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த மீட்கும் கிரயத்தை சபை வகுப்பாருக்குக் கடனாகக் கொடுப்பதில் தேவன் முழுமையாகத் திருப்தி அடைந்தார். அந்த கடனுக்கு தேவனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த மீட்கும் கிரயம் பிணையமாக இருந்தது. கடன் பெற்ற நபர்களெல்லாம் மனுஷர்களாக நித்தியத்திற்கும் மரிக்கும்வரை இந்த மீட்கும் கிரயம் தேவனுடைய கரத்திலேயே தொடர்ந்து இருப்பதால், இந்த பரிவர்த்தனையில் அடங்கியுள்ள செயல்களையெல்லாம் கருதப்பட்ட நிலையில் கிரயத் திற்குக் கொள்ளப்படுதலாக *(Reckoned purchase)* எண்ணு வது சரியானதாகும். மேலும் அந்த நபர்கள் எல்லோரும் மரித்தப் பிறகு, கணக்கில் எழுதப்பட்ட நிலையிலிருந்தும் அந்த மீட்கும் கிரயம் முழுமையாக விடுவிக்கப்படும். ஆகையால் மீட்கும் கிரயம் இனி அந்த கடனுக்குப் பிணையாக இருக்க அவசியமில்லை. ஏனென்றால் அவர்கள் மரிக்கும் வரை, பலி புண்ணியம் அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் மரித்த பிறகு அது இனி கடனாகவும் இருப்பதில்லை. ஏனென்றால் தேவ நீதியைப் பொருத்தவரை, நித்தியத் திற்கும் மரித்த நபர்கள் (மனுஷர்கள்), முற்காலத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கடனிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பார்கள். ஏனென்றால் இப்பொழுது அவர்களுடைய மனுஷீகம் முழுவதும் கடன் கொடுத் தவரிடத்தில் இருக்கிறது. அது இப்பொழுது அவருடைய உடைமையாக இருப்பதால், அது எல்லா கடன்களையும் ரத்து செய்யும். இவ்வாறாக, தேவனிடத்தில் ஒப்புவிக் கப்பட்டிருந்த மீட்கும் கிரயமானது, சுவிசேஷ யுகத்தின் முடிவில், அது வரை கடனாகக் கொடுக்கப்பட்டிருந்த நிலையிலிருந்தும் விடுவிக்கப்பட்டிருக்கும். ஆகையால், கிறிஸ்துவுக்குச் சொந்தமான அந்த பலி புண்ணியத்தை, இப்பொழுது அவர் உலகத்தைக் கிரயத்திற்குக் கொள்வ தற்காக உபயோகிக்கக் கூடும். அதன் மூலம் அவர் கிரியைகளினால் நியாயமாக்கும் இரட்சிப்பின் செயல் முறையைச் செயல்படுத்தத் தொடங்குவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★


**தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல்**
**நம்மெல்லாருக்காகவும்**
**அவரை ஒப்புக்கொடுத்தவர்,**
**அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும்**
**நமக்கு அருளாதிருப்பதெப்படி?**
*ரோம. 8:32*

## பெங்களூரு கன்வென்ஷன்

**கர்த்தருக்குச் சித்தமானால்**
*"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"*
**சகோதர ஐக்கியக் கூட்டம், பெங்களூரில்**
**ஆகஸ்ட் மாதம் 8,9,10 தேதிகளில்**
**(வெள்ளி, சனி, ஞாயிறு) நடைபெறும்.**
"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்
விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை
இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"


# புது உடன்படிக்கை

*Monthly newsletter published by*
*the brethren of the*
*Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*

***உங்கள் கவனத்திற்கு***
சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது